மாலை 46 மணி 9 செப்டம்பர் 2004 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு



## கபாலீஸ்வரர்
- கும்பாபிஷேக காட்சிகள்

ஆசியாவின் பெரிய விநாயகர்

## கல்விச் செல்வம் அருளும் ஸ்ரீ ஹயக்ரீவர்
- ஏ.எம்.ராஜகோபாலன்

## மயிலை கபாலீஸ்வரர் வரப்பிரசாதி
- பாலகுமாரன்

அழகும் - அமைதியும் தவழும் விஸ்வாஸ் வளாகத்தில் தங்கள்
இல்லத்தை தேர்வு செய்து பெருமிதம் கொள்வீர்!

"அக்ரிணி - Phase - I" மீனாட்சி மில் பங்களா வளாகம்

அடுக்குமாடி இல்லங்கள்

| | |
|---|---|
| 59.46 ச.மீ. - 5,00,000.00* | 101.73 ச.மீ. - 13,50,000.00** |
| 81.29 ச.மீ. - 8,00,000.00* | 115.20 ச.மீ. - 14,50,000.00** |
| 92.44 ச.மீ. - 10,00,000.00* | 117.52 ச.மீ. - 15,00,000.00** |

"வஸூதாரா"

மீனாட்சி மில் வளாகம், திருப்பரங்குன்றம் ரோடு, ஆண்டாள்புரம், மதுரை.

தனி வீடுகள் மற்றும் வரிசை வீடுகள்

வரப்ரதா - 1 - தனிவீடு - 223.00 ச.மீ.
மனையிடத்தில் - 198.00 ச.மீ. வீடு - 30,00,000.00**

வரப்ரதா- 2 - தனிவீடு - 162.58 ச.மீ.
மனையிடத்தில் - 98.00 ச.மீ. வீடு - 22,00,000.00**

வதுமிதா - வரிசைவீடு - 130.06 ச.மீ.
மனையிடத்தில் - 119.12 ச.மீ. வீடு - 18,00,000.00**

"பொற்குடம்" ஸ்டேட் பேங்க் ஆபீஸர் காலனி, பைபாஸ் ரோடு.

அடுக்குமாடி இல்லங்கள் - 99.00 ச.மீ. - 13,00,000.00**

(*நிபந்தனைகளுக்கு உட்பட்டது) (**அனைத்து செலவுகளும் உள்பட)

குழந்தை தொழிலாளர் முறையை ஒழிப்போம்

விண்ணின் மழைத்துளி! மண்ணின் உயிர்த்துளி! மழைநீர் சேகரிப்போம்!

SAA/MDU

VISVAS PROMOTERS (P) LTD

Site Office : 78, TPK Road, Sri Meenakshi Mill Bunglow Campus, Andalpuram, Madurai.

Ph : 0452- 2605211, 2605212, 2605271, 2605272, 2605273, 2300388, 2601581, 2301508.

Fax : 0452-2605274. Cell : 98429-57721, 98429-84868, 98421-63994, 98429-49489. E.mail : visvaspltd2002@yahoo.com

Avail home loans with UNION BANK OF INDIA, KOCHADAI BRANCH, Madurai.



திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2035 தாரண - ஆவணி

மாலை-46 மணி -9 செப்டம்பர் 2004

# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

செப்டம்பர் மாதம் பண்டிகைப் பருவத்தின் துவக்க மாதம் எனலாம். விநாயகர் சதூர்த்தியில் தொடங்கி கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசி விரதம், தீபாவளி, திருக்கார்த்திகை, வைகுண்ட ஏகாதசி, என்று தைப் பொங்கலில் முடியும் விரதங்களும் விழாக்களுமான பருவ மழையின் முதற்சாரல் செப்டம்பர் மாதம் எனலாம். இவ்விதழில் இம்மாத விழாக்கள், முன் மாத அதிமுக்கிய ஆன்மீக நிகழ்வுகள், இவற்றோடு முன்னோரைப் பூசிக்கும் மாளய அமாவாசை பற்றியும், வைணவ ஆச்சாரியன் தூப்புல் வேதாந்த தேசிகர் குறித்தும், தலவிருட்சங்கள் குறித்தும், கிருஷ்ணஜெயந்தி குறித்த சிறப்புச் செய்திகளும் உண்டு.

பிரபலங்களின் கட்டுரைகள் இந்த இதழ் முதல் புதிய அறிமுகம். இனி இது தொடரும். திரு. ஏ.எம். இராஜகோபாலன் அவர்களின் கட்டுரை, கல்வி வரமருளும் அருள்மிகு ஹயக்ரீவர் வழிபாடு குறித்த மாணவர்களை கல்வி, ஒழுக்கம் மிக்க குடிமகனாக உருவாக்க வல்ல இன்றைய தேவைக்கேற்ற கட்டுரை. அருள்மிகு கபாலீஸ்வரர், கற்பகாம்பாள், தெய்வீகத் தம்பதியரை வரப்பிரசாதி என தனக்கு நேர்ந்த இறை அனுபவத்தை தனக்கே உரிய உணர்ச்சி மிகு நடையில் திரு. பாலகுமாரன் எழுதியுள்ளது அத்திருக்கோயிலின் குடமுழுக்கை ஒட்டி அமைந்த சிறப்புக் கட்டுரை.

அன்னதானம் குறித்த வாரியார் கட்டுரை, அன்று அவர் கண்ட கனவை இன்று திருக்கோயில்களில் நாம் நனவாக்கி உள்ள நிலையைக் கண்டு மகிழ அவர் இல்லையே என்று ஏங்க வைக்கிறது. காலச்சுவடுகள் பகுதி சுவையான தொடக்கம்.

மொத்தத்தில் இம்மாத இதழும், தமிழ் மக்கள் படித்துச்சுவைக்கப் பல செய்திகளை, துணுக்குகளை, கருத்துக்களை பழமை குன்றாத புதுமையோடு அள்ளிதருவதால் வழக்கம் போல் படித்தபின் எவரும் பாதுகாக்க வேண்டிய ஒன்றே!.

உங்கள் கருத்துக்களை கடிதங்களாக எதிர்நோக்குகிறேன்.

அன்புடன்,



[ஜி.இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.]

ஆணையர்,

இந்து சமயஅறநிலைய ஆட்சித்துறை

## உள்ளே...

1. அறநிலையத்துறை ஆற்றிவரும் அறப்பணிகள் 2
திருமிகு ஜி.இராம கிருஷ்ணன் இ.ஆ.ப
2. கல்வி வரம் தந்தருளும் ஹயக்ரீவர் 4
திரு.ஏ.எம்.இராஜகோபலன்
3. விநாயகர் மாட்சி - அமரர் ந.ரா.முருகவேள் 8
4. கேள்வி பதில் - முனைவர் இரா.செல்வகணபதி 11
5. மாண்டோர்க்கு நினைவாஞ்சலி மாளய தர்ப்பணம் 12
6. திருமந்திர உபதேசம் - திரு.டி.வி. வெங்கட்ராமன்(இ.ஆ.ப.)ஓய்வு 13
7. நரமுக கணபதி எழுந்தருளிய திலதர்ப்பணபுரி 15
8. விபூதி - 16
9. கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான் - திரு ஜெய உத்திரன் 17
10. சமபந்தி பொது விருந்து 19
11. அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் படங்கள் 20
12. திருவிளையாடல் புராணம் - இரா. அரங்கசாமி 22
13. காலச்சுவடுகள் - 24
14. வணங்குவதற்குரிய தாவரங்கள் 25
15. அன்னதானம் - திருமுருக கிருபானந்தவாரியார் 27
16. மகாபாரதம் - முனைவர் த. அமிர்தலிங்கம் 30
17. மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேக சிறப்பு அம்சங்கள் 34
18. மயிலை கபாலீசுவரர் வரப்பிரசாதி - பாலகுமாரன் 35
19, இராஜமன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி
உற்சவர் அழகுத் திருக்கோலம் 37
20. தூப்புல் ஸ்ரீ வேதாந்த தேசிகர் - 39



# அறநிலையத் துறை ஆற்றிவரும் அறப்பணிகள்

- திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப.
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

**திருக்கோயில்களால் நடத்தப்படும் கல்வி மற்றும் பிற நிறுவனங்கள் :**

தெய்வநெறிகளைக் கடைப்பிடிக்கத் தேவையான கட்டுப்பாட்டினையும், கலாச்சாரம் மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் சமூக நோக்கோடு திருக்கோயில்கள், நடத்தி வரும் சமயம் மற்றும் பொதுக்கல்வித் தொடர்பான பள்ளிகள், கல்லூரிகள் அவற்றின் விவரம் கீழ் வருமாறு:-

**அ) கல்வி நிறுவனங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | கல்லூரிகள் | 5 |
| 2. | தொழில் நுட்பப் பயிலகங்கள் | 2 |
| 3. | மேல் நிலைப்பள்ளிகள் | 12 |
| 4. | உயர்நிலைப்பள்ளிகள் | 10 |
| 5. | நடுநிலைப் பள்ளிகள் | 3 |
| 6. | ஆரம்பப்பள்ளிகள் | 3 |
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |
| 8. | நாதசுரம் மற்றும் தவில்பள்ளிகள் | 4 |
| 9. | வேதஆகம பாடசாலைகள் | 4 |
| 10. | தேவாரப் பாடசாலைகள் | 2 |
| 11. | திவ்யப்பிரபந்த பாடசாலைகள் | 3 |
| 12. | காதுகேளாதோர் - பேச இயலாதோர் பள்ளி | 1 |

**(ஆ) சமூக நல நிறுவனங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | சித்த வைத்தியசாலைகள் | 9 |
| 2. | ஆங்கில மருத்துவ மனைகள் | 2 |
| 3. | கருணை இல்லங்கள் | 42 |
| 4. | முதியோர் இல்லங்கள் | 3 |

**இலவசத் திருமணம்:**

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளி மக்களுக்கு வசதிமிக்க திருக்கோயில்கள் சார்பாக இலவசத் திருமணங்கள் நடத்திடும் திட்டம் ஒன்று செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் திருமணம் ஒன்றுக்கு ரூ.5500/- செலவு செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது. இதன்படி ஆண்டுதோறும் இலவசத் திருமணங்கள் நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் நிதிவசதிமிக்க ஒவ்வொரு திருக்கோயில்களிலும் தனித்தனியே நடத்தப்பட்டு வந்த இலவசத் திருமணங்கள் 18.6.2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாக ஒரே இடத்தில் 1053 இணைகளுக்கு சென்னை, திருவேற்காட்டில் நடத்தப்பட்டன. இத் திருமணத்தின் மூலம் 719 இணைகள் ஆதிதிராவிடர் வகுப்பினரும், 22 இணைகள் பழங்குடி இனத்தவரும், 165 இணைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், 144 இணைகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், 3 இணைகள் இதர வகுப்பினரும் பயனடைந்தனர்.



சிவகங்கை மாவட்டம், அரியாகுறிச்சி
அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில்
திருமண மண்டப திறப்புவிழா நாள் 21.08.2004



தாயை மகன் இல்லையென்றாலும் தாய் அன்பு நீங்காதது போல்,
கடவுள் இல்லையென்றாலும் கடவுளின் கருணை
மனிதர்களிடத்தில் நீங்குவதில்லை.





2004 ஆகஸ்ட் 19,20 ஆகிய தேதிகளில் காஞ்சிமாவட்டம் திருக்கழுக்குன்றம், அருள்மிகு திரிபுரசுந்தரி உடனுறை வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் சங்குதீர்த்த புஷ்கரமேளா மற்றும் இலட்சதீபப் பெருவிழாவில் மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் பி.சி. இராமசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் எஸ். சோமசுந்தரம், தமிழ் வளர்ச்சி பண்பாடு இந்து சமயஅறநிலையஆட்சித் துறை செயலர் திரு. இராமையா மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## அன்னதானத்திட்டம் :

'2002-2003ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையின்போது மேதகு ஆளுநர் அவர்களால் அறிவிக்கப்பட்டதையடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழகத் திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.3.2002 அன்று துவக்கி வைக்கப்பட்டது. முதற்கட்டமாக 63 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் தற்போது விரிவுபடுத்தப்பட்டு மொத்தம் 171 திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்கள் அனைத்திலும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மாலை மாணவர்களுக்கு கற்றறிந்தோரைக் கொண்டு ஆன்மிகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள், "நீதிபோதனை" வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

அன்னதானத் திட்டம் திருக்கோயில்களில் தொடர்ந்து நடைபெறும் பொருட்டு நன்கொடையாளர்களிடம் இருந்து ரூ.15,000/- கட்டளை முதலீடுகள் பெற்று அதனைத் தனியாக வைப்பு நிதி ஏற்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு நன்கொடையாளர்கள் விரும்பும் வருடத்தில் ஏதாவது ஒரு நாள் அன்னதான செலவுக்கு ஈடுசெய்யும் வகையில் திட்டம் ஏற்படுத்தப்பட்டு கட்டளை முதலீடுகள் பெறப்பட்டு வருகின்றன. 18.07.04 வரை ரூ. 14,25,00000 மதிப்பிற்கு கட்டளை முதலீடுகள் பெறப்பட்டுள்ளன.

ஆணையர் பதவி பெயரில் ரூ.20 கோடி அன்னதான திட்ட வைப்பு நிதி ஏற்படுத்தவும் இந்த வைப்பு நிதியிலிருந்து நிதி பற்றாக்குறை உள்ள திருக்கோயில்களுக்கு நிதியுதவி செய்யத்தக்க வகையிலும் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை (18.07 2004) அன்னதான திட்டத்தில் 1,40,34,229 நபர்களும், ஆன்மிகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள் மூலம் 3,58,327 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

## சேக்கிழார் விழா:

தெய்வப் புலவர் சேக்கிழார் விழா ஆண்டுதோறும் நடைபெற ஏதுவாக ரூபாய் ஐந்து இலட்சம் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து மூலதனம் ஏற்படுத்தப்பட்டது. அம்முதலீட்டி லிருந்து கிடைக்கப் பெறும் வட்டித் தொகையைக் கொண்டு சேக்கிழார் விழா ஆண்டுதோறும் சேக்கிழார் பிறந்த நாளன்று சிறப்புற நடத்தப்பட்டு வருகிறது. 2004 மே திங்களில் நடைபெற்ற விழாவிற்கு ரூ.29,000/- வாஸ்தவ செலவின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

## திருஞானசம்பந்தர் இசை விழா:

சமயக்குரவர்களில் ஒருவரான திருஞான சம்பந்தரின் நினைவைப் போற்றும் வகையில் "திருஞான சம்பந்தர் இசை விழா" இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலில் 2001ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இவ்விழாவிற்கான செலவுத் தொகை ஆணையர் பொது நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. 2004ம் ஆண்டு நடைபெற்ற விழாவிற்கு ரூ. 15,000/- வழங்கப்பட்டுள்ளது.

OOO

(தொடரும்)

# கல்வி வரம் தந்தருளும்
# ஹயக்ரீவர்



ஜோதிட சக்கரவர்த்தி ஏ. எம். ராஜகோபாலன்

ஆச்சார்ய தேவோ பவ:

கல்வி கற்பிக்கும் குரு தெய்வத்திற்குச் சமம். சென்ற அறுபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த மாணவர்களின் மனநிலைக்கும், இன்றைய மாணவர்களின் மனநிலைக்கும் நிறைய வித்தியாசங்கள் உருவாகி உள்ளன.

இன்றைய மாணவர்கள், தூக்க முடியாத புத்தகச் சுமையைத் தூக்கிக் கொண்டு காலை வேளையில் பள்ளிக்கு ஓடும் நிலையில், அந்த சிறிது நேரத்தில் குடும்பமே அவசரத்தில் அல்லோகலப்பட்டு விடுகிறது. இத்தனைப் பாடுபட்டுப் படித்தும், மேல் கல்விக்குக் கடுமையான போட்டிகள், சிபாரிசுகள் இருந்தால் தவிர, மேல் படிப்புக்கு இடம் கிடைக்காத நிலை.



இதற்கிடையில் நண்பர்கள் சகவாசம், திரைப்படம், தொலைக்காட்சி, கிரிக்கெட்டில் ஆர்வம், இன்டர்நெட் என்ற பலவகைகளிலும் மாணவர் மனதைப் பாடங்களிலிருந்து திசை திருப்பும் (Mental diversions and Tensions) பல காரணங்கள். இந்த மனச்சுமைகளிலிருந்து விடுபட்டுப் படிப்பில் மனதை முழுமையாகச் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர் இன்றைய மாணவர்களும், மாணவியரும்.

கலியுகம் ஆரம்பிக்கும் தருணத்தில் மகாத்மாவான ஸ்ரீவேத வியாஸ பகவான் கலியுகத்தில் மனதைப் பேதலிக்கச் செய்யும் இத்தகைய விபரீத சூழ்நிலை ஏற்படப் போவதை, தனது ஆத்ம சக்தியினால் அன்றே உணர்ந்து, இதற்கான உபாயத்தை - பரிகாரத்தை - தனது ஈடிணையற்ற நூலான **"பவிஷ்ய புராணத்தில்"** அருளி இருக்கிறார்.

மனம் ஒருமைப்படவும், படிப்பில் மனதைச் செலுத்தி, கல்வியில் வெற்றி பெறவும், ஒழுக்கம், தூய்மை, நேர்மை, தேசபக்தி ஆகியவற்றுடன் நல்வாழ்வை அமைத்துக் கொள்ளவும், **ஸ்ரீ ஹயக்ரீவ பகவானை** மாணவ, மாணவியர் பூஜித்துப் பிறவிப்பயனை அடைய வேண்டும் என்பதை பவிஷ்ய புராணமும், அதன் பிறகு வந்த பல ஞானியர்களின் அறநூல்களும் விளக்கி உள்ளன.

மாணவ மணிகளே! ஸ்ரீஹயக்ரீவப் பெருமானின் தெய்வீக சக்தியை அறிந்து அவரைப் பூஜித்து கல்வியில் மட்டுமின்றி, ஒழுக்கத்திலும், பண்பிலும், தேசபக்தியிலும், உள்ளத்

தூய்மையிலும் உயர்ந்து உங்கள் குலத்திற்கும், குடும்பத்திற்கும், தெய்வத்திரு தாய் நாட்டிற்கும் பெருமை தேடித் தாருங்கள்.

**“மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்; - மன்னற்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு”.**

கல்வி மனிதனுக்கு ஒழுக்கம், நேர்மை, பக்தி, பண்பு ஆகியவற்றைத் தருகிறது. இந்த பூமி கர்ம பூமியாதலால் புண்ணியம் செய்தவர்கள் மட்டுமல்லாமல், தவறு செய்தவர்களும் பிறவி எடுக்கின்றனர். நல்லவர்களும், தீயவர்களும் சேர்ந்தே வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இப்பூவுலகில் கால காலமாக, யுகம் யுகங்களாக ஏற்பட்டு வருகிறது.

நேர்மையில் வாழ நல்லவர்கள் வற்புறுத்துவதால் தீயவர்கள் நல்லவர்களை அழிப்பதற்கு முயல்கிறார்கள். அதற்கு முதல்படியாகக் கல்வி என்னும் செல்வத்தை அபகரித்து விடுகின்றனர்.

எப்போதெல்லாம் அதர்மம் தலைதூக்கி, அதனால் தர்மத்திற்கு ஆபத்து ஏற்படுகின்றதோ, எப்போதெல்லாம் நல்லவர்கள் துஷ்டர்களால் துன்புறுத்தப் படுகிறார்களோ அப்போதெல்லாம் சர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் அவதரித்து தீயவர்களை அழித்து, நல்லவர்களைக் காப்பாற்றுகிறான் என்கிறது கீதை.

யுகங்கள் ஆரம்பிக்கும் முன், ஸ்ரீமந் நாராயணனின் நாபிக் கமலத்திலிருந்து படைக்கப்பட்டவர் நான்முகன் பிரம்மதேவன். அனைத்து உலகங்களையும், உயிர்களையும் சிருஷ்டி செய்யும்படி பிரம்மதேவனுக்குக் கட்டளை பிறந்தது. வேதங்களின் உதவியுடன் தேவர்களும், அசுரர்களும், நல்லவர்களும், தீயவர்களும், பலவித மிருகங்களும், பறவைகளும், பிராணிகளும், மரங்களும், செடிகளும் உருவாயின. பிரம்மாவினால் படைக்கப்பட்ட அசுரர்களுக்கும், தீயவர்களுக்கும், தேவர்களும், நல்லவர்களும், தொல்லைகளாகத் தோன்றினர்.

ஆதலால், இனி தேவர்களையும், நேர்மையானவர்களையும் பிரம்மா மேலும் படைக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் மது, கைடபர் என்ற இரு அசுரர்களும் வேதங்களை அபகரித்துக் கொண்டு ஓடி விட்டனர். வேதங்கள் இல்லாமல் பிரம்மதேவனால் தனது சிருஷ்டிக் கடமையைச் செய்ய முடியவில்லை.

அத்தருணத்தில்தான் எம்பெருமானான பகவான் ஸ்ரீஹயக்ரீவராக அவதரித்து வேதங்களை மீட்டு பிரம்மதேவரிடம் அளித்தார். பின்பு சகலகலாவல்லியான ஸ்ரீசரஸ்வதி தேவிக்கும் அனைத்து வேதங்களையும், வித்தைகளையும், கல்விச் செல்வங்களையும் ஸ்ரீஹயக்ரீவரே அளித்தருளினார்.

இவ்விதம் ஸ்ரீஹயக்ரீவராக எம்பெருமான் அவதாரம் செய்தது ச்ராவண மாதம் (ஆவணி)


ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமாள்
திருவஹீந்திரபுரம்
ஞாநாநந்த மயம் தேவம் நிர்மலஸ்படிகாக்ருதிம்
ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவம் உபாஸ்மஹே
-ஸ்வாமி தேசிகன்

# ஆசியாவின் மிகப்பெரிய விநாயகர்



மிகப்பெரிய மூர்த்தியான இந்த விநாயகர் (பத்தொன்பது அடி, பத்து அங்குலம்) உயரம் உடையவர். 10½ அடி அகலம் உடையவர். திருப்பூருக்கு அருகே உள்ள ஊத்துக்குளியில் இத்திருவுருவம் உருவாக்கப் பெற்றது. 10 சிற்பிகள் சுமார் இரண்டு ஆண்டுக்காலம் உழைத்து உருவாக்கினர். ஊத்துக்குளி கோவையில் இருந்து 75 கி.மீ. தொலைவு உள்ளது. இந்த தூரத்தைக் கடக்க 13 நாட்கள் ஆயின. கொண்டு வந்த லாரியில் இருந்து இருப்பிடத்தில் சேர்க்க ஏழு நாட்கள் ஆயின.

இவரின் பிரம்மாண்ட அழகையும், அருமையையும் நேரில் பார்த்தால் புலனாகும். இந்த பிருமாண்ட விநாயகர் கோவை நகரின் மத்தியில் புலியகுளத்தில் அமைந்துள்ளார். ஆசியாவின் மிகப்பெரிய பிள்ளையார்.

சிரவண (திருவோணம்) நட்சத்திரம் ஆகும்.

முற்பிறவிகளில் செய்யும் சில தவறுகளினால் இப்பிறவியில் பல குழந்தைகளுக்குக் கல்வி முன்னேற்றம் தடைபடுகிறது. அத்தகைய பாவங்களைப் போக்குவதற்கு ஸ்ரீஹயக்ரீவரைப் பக்தியுடன் பூஜிப்பதும், ஸ்ரீசரஸ்வதியைப் பூஜிப்பதும் மிகச் சிறந்த பலன்களை அளிக்கும். தொடர்ந்து சில மணி நேரம் படிக்க முடியாமல் சோர்வும், சஞ்சலமும் ஏற்படுவது, பாடுபட்டுப் படித்தவற்றை நினைவில் வைத்துக் கொள்ள முடியாமல் மறந்துவிடுவது, கல்வியில் நாட்டமின்மை, காரணமில்லாமல் ஆசிரியர்களிடமும், தான் படிக்கும் பள்ளி, கல்லூரியின் மீது வெறுப்பு, படிப்பில் விரக்தி, பிற மாணவர்களுடன் ஏற்படும் கெட்ட சகவாச தோஷத்தினால் கல்வி முன்னேற்றம் பாதிக்கப்படுவது, தேர்வுகளில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றும், உயர்கல்விக்கு இடம் கிடைக்காமல் போவது, திறமையும், தகுதியும் இருந்தும் உயர்கல்வியைத் தொடர்வதற்கு வசதியில்லாமல் போவது ஆகியவற்றைத் தவிர்க்க **ஸ்ரீஹயக்ரீவரைச் சரணடைவது ஒன்றே சக்தியுள்ள பரிகாரமாகும். கல்வித்தடை நீங்க எந்தப் பரிகாரம் செய்தாலும் இறுதியில் அது ஸ்ரீஹயக்ரீவரையே சென்றடையும்.** இத்தகைய ஹயக்ரீவர் குடிகொண்டுள்ள பல இடங்களில் முக்கியமானவை இருதலங்களாகும்.

### திருவஹீந்திரபுரம்

வைணவ மஹாபுருஷரான ஸ்வாமி ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகருக்கு ஒரு தருணம் வேதங்களின் சில சூட்சுமமான உட்பொருள்களையும், ரகசியங்களையும் அறிந்து கொள்ள முடியாமற் போயிற்று. அத்தருணத்தில் (கடலூருக்கு அருகில் உள்ள) திருவஹீந்திரபுரம் என்னும் திவ்ய திருத்தலத்தில் ஸ்ரீஹயக்ரீவரைக் குறித்து வேண்ட, அப்பெருமானும் உடனடியாக ஸ்ரீமகா தேசிகருக்குத் தரிசனமளித்து, வேதங்களில் புதைந்துள்ள அரும்பெரும் சூட்சுமமங்களை உபதேசித்தருளினார். இந்தப் பரமபவித்ரமான இடத்தில் ஸ்ரீஹயக்ரீவமூர்த்தியை இன்றும் தரிசித்து, அளவற்ற பயன்களை அடையலாம்.

அன்றைய காலத்திலிருந்து கல்வித் தடைகள் போன்ற பிரச்சனைகளுக்குச் சக்திவாய்ந்த பரிகாரத் திருத்தலமாக திருவஹீந்திரபுரம் விளங்கி வருகிறது.

### செட்டிபுண்ணியம் (செங்கல்பட்டு)

மிகப்பெரிய அளவில் இரு தடவைகள் ஏற்பட்ட அன்னியர்களின் தமிழகப் படையெடுப்புகளின் போதும், அதற்குப்பிறகு ஆங்கிலேயர்களின் கிழக்கிந்திய கம்பெனிக்கும் (East India Company) ஆற்காடு நவாப்பிற்கும் அடிக்கடி ஏற்பட்ட சண்டைகளின் போதும் திருவஹீந்திரபுரம், வடுவூர், திருப்பாதிரிப்புலியூர் போன்ற பிரசித்தி பெற்ற திருக்கோயில்கள் கைப்பற்றப்பட்டு,

போர்க் குதிரைகளின் லாயங்களாகவும், யுத்த தளவாடக் கிடங்குகளாகவும் அவர்களால் பயன்படுத்தப்பட்டன. மேலும், அவ்வப்போது ஏற்பட்ட யுத்த நிலைகளுக்கு ஏற்ப தளவாடக் கிடங்குகளாக மாற்றப்பட்ட இத் திருக்கோயில்கள் அடிக்கடி அவர்களுக்கு இடையே கைமாறின.

இத்தகைய விபரீத தருணங்களில், இந்த சன்னிதிகளில் எழுந்தருளியுள்ள விலை மதிப்பற்ற எம்பெருமான், தாயார் விக்கிரகங்களை எப்படியாவது காப்பாற்றிவிட பாடுபட்ட பெரியோர்கள், இரகசிய இடங்களுக்கு அந்த விக்கிரகங்களைக் கொண்டு சென்று ஆராதித்து வந்தனர்.

சுமார் 48 வருட காலம், இத்தகைய நிச்சயமற்ற நிலை நீடித்தபோது, பல பெரியவர்கள், வயோதிகத்தினால், பரமபதித்து விட்டனர். (காலமாகி விட்டனர்) ஆதலால், ஏராளமான பல திவ்யதேச எம்பெருமான்கள் (விக்கிரகத் திருமேனிகள்), ஆங்காங்கே தங்கி விட்டனர்.

இத்தகைய சரித்திர சம்பவங்களினால் **திருவஹீந்திரபுரத்தில் எழுந்தருளியிருந்த சக்திவாய்ந்த ஸ்ரீயோக ஹயக்ரீவ உற்சவ மூர்த்தி செட்டிப்புண்ணியம் என்ற திருத்தலத்தில் எழுந்தருளி விட்டார்.** தற்போது திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவரும், செட்டிபுண்ணியத்தில் ஸ்ரீயோக ஹயக்ரீவரும் எழுந்தருளியுள்ளார்கள். படிப்பு சம்பந்தமான அனைத்து தோஷங்களையும் ஒரு நொடியில் போக்கி, கல்விச் செல்வத்தை வாரி வழங்குவதில் இவ்விரு திருத்தலங்களும் தன்னிகரற்றவைகளாகும்.

**மயிலாப்பூர் அருள்மிகு வேதாந்த தேசிகர் திருக்கோயிலிலும் ஸ்ரீஹயக்ரீவர் எழுந்தருளி மாணவர்களுக்கு ஞானத்தை அருளி வருகிறார்.**

மாணவ மாணவியரிடத்தில் அளவற்ற கருணை காட்டும் ஸ்ரீஹயக்ரீவப் பெருமான் அவதாரம் செய்த நன்னாள் ஆவணி சிரவணமாகும். இந்த க்ஷேத்திரங்களுக்கு உங்கள் குழந்தைகளுடன் சென்று ஸ்ரீஹயக்ரீவரைத் தரிசித்துவிட்டு வாருங்கள். குழந்தைகள் படிப்பில் உள்ள தோஷங்கள் அனைத்தும் நீங்கிச் சிறந்து விளங்குவார்கள். கல்லூரிகளும், பள்ளிகளும் அந்நன்னாளில் தம் மாணவ, மாணவியரை இத்திருத்தலத்திற்கு அழைத்துச் சென்று தரிசித்து விட்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும். அதனால் அந்த நிறுவனங்களுக்கும் ஆண்டுத்தேர்வில் சிறந்த நற்பெயர் கிடைக்கும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

பக்தி, ஒழுக்கம், மனத்தூய்மை, தேசபக்தி ஆகியவற்றைப் பெறுவதே கல்வியின் நோக்கம். அவற்றைப் பெற ஆன்மீகம் மட்டுமே உதவும்.

மாணவர்கள் ஹயக்ரீவரைப் பூஜித்து அவருடைய திருமந்திரத்தை ஓதி கல்வியிற் சிறந்து மேலான ஞானமும் பெறுவீர்களாக!

⌘⌘⌘



## முக்குறுணி விநாயகர்

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் அருள்மிகு மீனாட்சியம்மன் சந்நிதியில் இருந்து அருள்மிகு சுந்தரேசுவரர் சந்நிதிக்குச் செல்லும் வழியில் நடுக்கட்டுக் கோபுரத்திற்கு எதிரே இவரது திருச்சந்நிதி அமைந்துள்ளது. ஒரே கல்லிலான 8 அடி உயரத்தில் இவரது திருவுரு அமைந்துள்ளது.

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் *(1623-1659)* தனக்கென அரண்மனை (மஹால்) கட்டுவதற்காக வண்டியூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் தென்புறம் மண்ணை வெட்டி எடுத்தபோது, மண்ணில் புதையுண்டு இருந்த இவ்விநாயகரின் திருவுருவைக் கண்டு எடுத்து 1645 ஆம் ஆண்டு இங்கு பிரதிஷ்டை செய்ததாகக் கூறப்படுகின்றது. இச்சந்நிதியில் அமைந்துள்ள திருவாட்சியில் திருமலை நாயக்கரின் உருவம் அமைந்துள்ளது. இவ்விநாயகப் பெருமானின் பெரிய திருவுருவத்திற்கேற்ப விநாயகர் சதுர்த்தி அன்று **முக்குறுணி (18 படி)** அரிசியில் ஒரே பெரிய கொழுக்கட்டை நெய்வேத்தியமாக படைக்கப்படுவதால் இவர் முக்குறுணி விநாயகர் என்று அழைக்கப்படுகிறார்.



# விநாயகர் மாட்சி

அமரர் ந.ரா.முருகவேள்

- முன்னாள் 'திருக்கோயில்' ஆசிரியர்

விநாயகர் கோயில் இல்லாத ஊர் ஒன்று கூட, நம் தமிழ் நாட்டில் இருத்தல் அரிது. பட்டி தொட்டிகள் ஆகிய எல்லா ஊர்களிலும், மூலை முடுக்குகளிலும், சாலை சந்திகளிலும், ஆற்றங்கரைகளிலும் குளக்கரைகளிலும், ஆலமரத்தடிகளிலும், அரசமரத்தடிகளிலும் விநாயகப் பெருமான் எழுந்தருளி விளங்குதல் காணலாம்.

## பழமையும் பெருமையும் :

நம் இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, இந்தியக் கலாசாரம் பரவியுள்ள ஜாவா, பாலி, சுமத்திரா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், கம்போடியா, சம்பா, அன்னம், சயாம், மலேயா, பர்மா, சிலோன் போன்ற ஏனைய பிற அயல் நாடுகளிலுங்கூட விநாயகர் வழிபாடு பரவியிருக்கின்றது.

திரு. சமன்லால் (Chaman Lal) என்பவர் தாம் எழுதியுள்ள "இந்து அமெரிக்கா" (Hindu America) என்னும் மெக்சிகோ (Mexicol) பெரு நூலில் (Peru) முதலிய அமெரிக்க நாட்டுப் பகுதிகளிலும் கூட, மிகப் பழங்காலத்திலேயே விநாயகர் வழிபாடு பரவியிருந்ததென்று பல சான்றுகளுடன் விளக்கி நிறுவுகின்றார்.

சர்மானியர் வில்லியம்ஸ் (Sirmonier Williams) என்னும் பேரறிஞர், ஜேனஸ் (Janus) என்னும் உரோம நாட்டுக் கடவுளுக்கும், கணேசர் (Ganesh) என்னும் நம் இந்திய நாட்டுக் கடவுளுக்கும் இடையே தொடர்பும் ஒப்புமையும் இருப்பதாகக் கருதுகின்றார். எச்செயலையும் தொடங்குதற்கு முன்னர் முதற்கண் வழிபடப் பெறும் கடவுளாகக் கணேசர் நம் நாட்டில் விளங்குதல் போலவே, உரோம நாட்டிலும் ஜேனஸ் (Janus) என்னும் கடவுள் விளங்கி வந்திருக்கின்றார். அதனாலேயே ஓர் ஆண்டிற்குரிய மாதங்களுள் முதல் மாதமானது ஜேனஸ் (Janus) என்னும் கடவுளின் பெயரை ஒட்டி, ஜனவரி (January) எனப் பெயர் வைத்து, அங்கு வழங்கப் பெறுவதாயிற்று.

ஏறத்தாழக் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தாகக் கருதப்பெறும் அமராவதிச் சிற்பங்களுள், விநாயகர் திருவுருவும் காணப்படுவதாக டாக்டர் ஜெ. பர்கெஸ் (Dr. J. Burgess) என்பவர் குறிப்பிடுகின்றார்.

" வேதங்களுள் மிகவும் முதன்மையும் பழமையும் வாய்ந்தது இருக்கு வேதம்". அதன்கண் கணபதி பற்றிய குறிப்பு வந்திருக்கின்றது. கணங்களுக்குத் தலைவர் கணபதி.

முன்பு ஆவணி மாதம், ஆண்டின் முதல் மாதமாகக் கருதி கணிக்கப் பெற்று வந்தது. அப் பழங்கால முதலே, விநாயகர் வழிபாடும் தோன்றி நிலவி வரத்தலைப்பட்டிருத்தல் வேண்டும்! இன்னோரனைய செய்திகளால் விநாயகர் வழிபாட்டின் பழமையும் பெருமையும் விளங்குதல் காணலாம்.

## திருவுருவச் சிறப்பு :

யானை முகமும், மூன்று கண்களும், இரு செவிகளும், ஐந்து கைகளும், ஒரு பெரிய வயிறும், இரு குறுகிய திருவடிகளும் கொண்டது. யானைமுகம் விநாயகப் பெருமான் பிரணவ வடிவினர் என்பதை யுணர்த்தும். மூன்று கண்களும் ஞாயிறு, திங்கள், தீ என்னும் மூன்று ஒளிப்பொருள்களையும் குறிக்கும். ஐங்கரங்களும், அவர் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்பவர் என்பதைப் புலப்படுத்தும்.



கலங்கிய தண்ணீரில் சூரிய பிம்பம் தெரியாது. அதுபோல், தெளிவில்லாத உள்ளத்தில் கடவுள் தெரியமாட்டார்.

அவர்தம் கைகளுள் ஒன்றில் தம் பொருட்டு மோதகம் வைத்திருக்கின்றார்; மற்றொரு கையில் தேவர்களைக் காப்பதற்காகத் தந்தம் ஏந்தியிருக்கின்றார்; பிறிதொரு கையில், தம்முடைய தாய் தந்தையர் ஆகிய பார்வதி பரமேசுவரர்களை அபிஷேகம் செய்து வழிபடுதற் பொருட்டு, நீர்க்கலசம் தாங்கியிருக்கின்றார்; ஏனைய இரண்டு கைகளிலும் உயிர்களாகிய நம்மை ஆணவமலம் ஆகியவை பற்றி நலிவுறுத்தாதிருக்கச் செய்தற் பொருட்டுப் பாசமும், அங்குசமும் வைத்துக் கொண்டிருக்கின்றார்.

விநாயகருடைய திருமேனியை உற்று நோக்கினால், மேலும் பல அரிய உண்மைகள் புலனாகும். ஒரு புறம் தந்தம் உள்ளமையால் ஆண் எனவும், மற்றொரு புறம் தந்தம் இல்லாமையால் பெண் எனவும் கருதப்படுத்துகின்றது.


விநாயகர் சித்தி - புத்தி என்னும் இரு சக்திகளையும் தமக்குரிய தேவிமாராகக் கொண்டிருக்கின்றார். அவரை வணங்கினால் நமக்குச் சித்தி (நற்பேறு), புத்தி (நல்லறிவு) வாய்த்தல் திண்ணம் என்பது கருத்து.

⌘⌘⌘

### பஞ்சாங்க நமஸ்காரம்

தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு ஆகிய ஐந்து அவயங்களும் பூமியிற்படும்படி நமஸ்கரித்தல்

## ஸ்ரீ ஜெயந்தியும் கோகுலாஷ்டமியும் ஒன்றா? வேறுவேறா?



**ப**தில்(உ.வே.பார்த்தசாரதி பட்டாச்சாரியார், அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி) : பகவான் கிருஷ்ணனின் பிறந்த தினம் ஆவணி மாதம் அஷ்டமி திதி ரோகிணி நட்சத்திரம் ஆகும். சிலர் அஷ்டமியுடன் கிருத்திகை நட்சத்திரம் வருமெனில் அது "வேதை" (கூடாத ஒன்று) எனத் தவிர்த்து அதற்கு அடுத்த நாளில் அஷ்டமியாக இல்லாவிட்டாலும் கிருஷ்ண ஜெயந்தியாகக் கொண்டாடுவர். இவர்கள் கோகுலாஷ்டமி என்ற பெயரை பயன் படுத்துவதில்லை. ஸ்ரீ ஜெயந்தியை கிருஷ்ணஜெயந்தி என்றே குறிப்பிடுவர்.

வேறு சிலர் அஷ்டமி வரக்கூடிய இரவு உள்ள தினத்தை மட்டுமே முக்கியமாகக் கருதி பிறவற்றைப் பொருட்படுத்தாது அஷ்டமியே முக்கியமாக கிருஷ்ணஜெயந்தியைக் கொண்டாடுவர். இவர்கள் கோகுலாஷ்டமி என்றே தமது திருநாளைக் குறிப்பிடுவர்.

இதனால் பொதுவாக கோகுலாஷ்டமி ஒருநாளிலும், ஸ்ரீஜெயந்தி வேறொரு நாளிலும் கொண்டாடப்படுவதால் வேறுவேறு பண்டிகைகளாக கொண்டாடப்படுவதாக கருதக்கூடாது

ஸர்வம் கிருஷ்ணார்ப்பணம்.

### குட்டும், கொட்டும் :


சிவாலய வழிபாட்டின் போது, முதலில் பக்தர் பிள்ளையாரின் திருமுன் நின்று தலையிலே குட்டிக் கொண்டு அவரை வழிபட வேண்டும். சண்டேசுவரர் எப்போதும் தியானத்தில் இருப்பவர். அவரின் திருமுன் நின்று, இவரது கவனத்தை ஈர்க்க, மெல்லக் கைகளைக் கொட்டி இவரை வழிபட வேண்டும்.

பிள்ளையார் குட்டுடன் தொடங்கிச் சண்டேசுவரர் கொட்டுடன் முடிவது சிவாலய வழிபாடு. ஒன்று சிவாலய வழிபாட்டின் தொடக்கம்; மற்றொன்று நிறைவு.

புதிய பொலிவுடன் திருக்கோயில்
திங்களிதழ் வெளிவருவது கண்டு
மகிழ்கிறோம்.
நல்வாழ்த்துக்களுடன்:

**எம்.டி. சம்பத் முதலியார்**
**மளிகை வியாபாரம்**


73, பஜார் தெரு, சோளிங்கர், வேலூர் மாவட்டம்
தொலைபேசி : 954172-262250



**ஸ்ரீ செல்வ விநாயகர் ஆயில்மில்**
**ஸ்ரீ செல்வ விநாயகர் அரிசி ஆலை**

திருத்தணி ரோடு, சோளிங்கர்
தொலைபேசி : 954172-262150

# ? பதில்



முனைவர் இரா. செல்வ கணபதி

☆☆☆ **கேள்வி :** சந்தானாச்சாரியார் என்பார் யார்? அவர்கள் எத்தனை பேர்?

**பதில் :** சைவ சித்தாந்த மூல நூல் ஆசிரியர் நால்வர். அவர்களை சந்தானாச்சாரியார் என்று குறிக்கின்றனர். 1. மெய்கண்டார் 2. அருணந்தி சிவாச்சாரியார் 3. மறை ஞான சம்பந்தர் 4. உமாபதிசிவாச்சாரியார் என்போர் அந்நால்வர்.

☆☆☆ **கேள்வி :** சென்னை நகரில் பாடல் பெற்ற சிவத் தலங்கள் உள்ளனவா? எத்தனை உள்ளன?

**பதில் :** தேவார ஆசிரியர்களால் பாடல் பெற்ற ஐந்து சிவத்தலங்கள் சென்னையில் உள்ளன. 1. திருமயிலை (மயிலாப்பூர்) 2. திருவான்மியூர் 3. திருவேற்காடு 4. திருவொற்றியூர் 5. திருவலிதாயம் (பாடி) என்பன அவை.

☆☆☆ **கேள்வி :** கந்தபுராணம் - கந்தபுராணச் சுருக்கம் இரண்டும் ஒன்றா? வேறு வேறு நூல்களா?

**பதில் :** வேறு வேறு நூல்கள். கந்த புராணம் விரிவான நூல். பாடியவர் கச்சியப்ப சிவாச்சாரியார். கந்தபுராணச் சுருக்கம் சிறிய நூல். அதனைப் பாடியவர் தருமபுரி ஆதீனத்தை சேர்ந்த சம்பந்த சரணாலய சுவாமிகள் என்ற கட்டளைத் தம்பிரான்.

☆☆☆ **கேள்வி :** இருக்கு வேதத்தில் வரும் கணபதியும் நாம் இன்று வழிபடும் விநாயகரும் ஒருவரா? வெவ்வேறானவரா?

**பதில் :** இருக்கு வேதத்தில் வரும் கணபதி என்ற குறியீடு தேவர்களின் தந்தையான 'பிராமணஸ்பதி' என்னும் தேவருக்கு உரிய வேறு பெயர். மனுஸ்மிருதிமான் பழைய பிரதி ஒன்று கணேசர் சூத்திரருக்கு உரிய கடவுள் என்று குறிக்கிறது. அதர்வசிர உபநிடதம் சிவனை விநாயகர் என வர்ணிக்கிறது. (ஆதாரம் இந்து கலைக் களஞ்சியம் பகுதி 3 பக்கம்.81)

☆☆☆ **கேள்வி :** 'கிரிதாரி' என்ற சொல் யாரைக் குறிக்கும்?

**பதில் :** கண்ணனைக் குறித்து வந்தது. கிரி - மலை, மலையினைத் தாங்கியவர் என்பது பொருள். கோகுலத்தில் வாழ்ந்த கோவலரையும், பசுக்களையும் கோவர்த்தனம் என்னும் மலையினை குடையாகப் பிடித்து கண்ணன் காத்த வரலாறு பாகவதத்தில் உள்ளது.

☆☆☆ **கேள்வி :** 'அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லை' என்ற பழமொழிக்கு உண்மையான பொருள் என்ன?

**பதில் :** அஞ்சு என்பது 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்தைக் குறிக்கும். இரண்டு என்பது 'சிவ' என்பதைக் குறிக்கும். ஐந்தெழுத்தை ஓதுவதால் கிடைக்கும் பலன் இரண்டெழுத்தாகிய 'சிவ - சிவ' என்பதை ஓதினாலும் கிடைக்கும் என்பதே உண்மைப் பொருள்.

☆☆☆ **கேள்வி :** இரு வினை என்பது என்ன?

**பதில் :** புண்ணியம், பாவம் என்பன இருவினை எனப்படும்

☆☆☆ **கேள்வி :** உருத்திராக்கம் என்ற சொல்லுக்கு பொருள் என்ன?

**பதில் :** உரு = உடல்; திரம் = உறுதி; ஆக்கம் = விளைவிப்பது

# மாண்டோர்க்கு நினைவாஞ்சலி

# மாளய தர்ப்பணம்

மளாயம் என்பது சொல் வழக்கில் மாளயம் எனத் திரிந்து வழங்குகிறது. நமக்கு உடலும் உயிரும் தந்த நமது பெற்றோர்களையும், மற்றும் அவரது முன்னோர்களையும் நினைத்து வழிபடும் மஹாளய பட்ச பதினைந்து நாட்களுமே முக்கியமானவை. நமது முன்னோர்கள் வருடத்தில் இப்பதினைந்து நாட்களில் நம் இருப்பிடம் தேடி வந்து நம்மை ஆசிர்வதிக்கிறார்கள் என்பது நம்பிக்கையாகும்.

ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதத்தில் கிருஷ்ண பட்சத்தில் பதினைந்து திதிகளும் மஹாளயப் புண்ணிய காலம் என்று அழைக்கப்படுகிறது. இது நமது முன்னோர்களை நினைவுகூர்ந்து தர்ப்பணம் செய்து வழிபாடு செய்ய வேண்டிய தினங்களாகும்.

தாய் அல்லது தந்தையின் இறந்த தேதி, பரணி நட்சத்திரம் வரக்கூடிய மகாபரணி என்னும் தினம். எட்டாவது திதியாகிய மத்யாஷ்டமி ஆகிய தினங்களில் நமது முன்னோர்களை நினைத்து அவர்களுக்காக பல வகை அன்னங்களைப் படைத்து அமாவாசை தோறும் தர்ப்பணம் செய்து வணங்குவது வழக்கத்தில் உள்ளது. எந்த அமாவாசையில் தர்ப்பணம் செய்யாவிட்டாலும் மஹாளய அமாவாசை தர்ப்பணம் ஒன்றை மறவாமல் செய்வது அவசியம். அது அனைத்து அமாவாசை தர்ப்பணப் பலன்களையும் தரும் என்பது நம்பிக்கை.

பித்ருக்கள் நமது உடம்பின், உயிரின் மூலக்கர்த்தாக்கள் ஆவார்கள். மகாளய தினத்தில் தாய் வழி, தந்தை வழி மற்றும் முன்னோர்களும் சேர்ந்து பூசை வழிபாடு நடத்துவதால் அவர்கள் தம் வம்சத்தினைச் சேர்ந்த இம்மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என வாழ்த்துவதாக கருதப்படுகிறது. அதனைச் செய்யாவிடில் பாவம் வந்து சேரும் எனவும் ஒரு கருத்து நிலவுகிறது.

***29.09.2004* முதல் *13.10.2004* வரை மஹாளய பட்சமும் 13.10.2004ல் மஹாளய அமாவாசையும் வருகின்றன.**

## திருக்கச்சி நம்பிகளைப் பிடித்த ஏழரைச் சனி

ஒரு சமயம் ஏழரை ஆண்டுச் சனியின் சம்பந்தம் திருக்கச்சி நம்பிக்கு நேருவதாக இருந்தது. ஏழரைச் சனியின் ஆதிக்கம், குறைந்தது ஏழரை நாழிகையாவது (3 மணி நேரம்) அவர் அனுபவித்தே ஆக வேண்டும் என்பது விதி என எம்பெருமாள் கூறிவிட்டார். இதன்படி, பெருமாளின் அணிகலன் ஒன்று தொலைந்து போனதற்கு அர்ச்சகர்கள், கைங்கர்யதாரர் திருக்கச்சி நம்பிகளின் மீது திருட்டுப்பழி சுமத்தி நம்பிகளைக் காவலில் வைத்தனர். ஏழரை நாழிகை கழிந்ததும் பெருமாளின் திருமேனியிலேயே மலர்களின் உள்ளே மறைந்து கிடந்த ஆபரணம் கண்டெடுக்கப் பட்டது. அனைவரின் கனவிலும் பெருமாள் தோன்றி திருக்கச்சி நம்பிகளுக்கு ஏழரைச் சனியால் நேர்ந்த அனுபவத்தை விளக்கவே நம்பிகள் விடுதலையானார். விதி வலியது என்றாலும் இறையருளால் வலிய விதியின் கொடுமையைக் குறைக்கலாம்.



அடுத்த இதழில்...
மதுரைத் தலங்களும் தேவாரமும் -
**டாக்டர் கு. ஞானசம்பந்தன்**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
மதுரை தியாகராஜர் கல்லூரி -
அவர்களின் சிறப்புக் கட்டுரை

### அஷ்டாங்க நமஸ்காரம்

தலை, செவியிரண்டு, கால் இரண்டு, புஜங்களிரண்டு, மோவாய்க்கட்டை ஆகிய எட்டு அவயங்களும் பூமியிற்படியும்படி வணங்குதல்

# திருமந்திர உபதேசம்

திருமந்திரச் செம்மல்
டி.வி. வெங்கட்ராமன் [இ.ஆ.ப. ஓய்வு]

உலக ஈடுபாடுகளைக் கடந்த ஒரு ஞானத்தை ஒவ்வொரு மனிதனும், தனது ஆழ்மனத்தில் விரும்புகிறான். இந்த ஞானம், அறிவைப் பயன்படுத்திச் செய்திகளைச் சேகரித்துப்பெறும் அறிவுக் கூட்டம் அல்ல. இது அருளுடைமையில் வரும் ஞானம். இறைவன் உயிருடன் அருளைக் கூட்டுவித்து, ஞானத்தையும் தருகிறான். இந்த ஞானம் பேரறிவாகிய இறைமையின் ஞானத்தின் வெளிப்பாடேயாகும். இந்த ஞானத்தை உயிர் உணர்வு நிலையில் பெறுகிறது.



திருவருள் உயிருடன் எங்கும், எப்போதும் இணைந்தே இருக்கிறது. அறக்கருணை, மறக்கருணை ஆகியவற்றால் திருவருள் உயிரிடத்தில் தன்னைப் பதித்துக் கொள்கிறது. அதை உணர்ந்து கொள்ளாத உயிர் அறியாமை எனும் நிலையில் உள்ளது. பல பிறவிகள் எடுத்துப் பெற்ற பக்குவத்தால் உயிர் படிநிலை வளர்ச்சி பெற்று உலக உறவில் சலிப்படைந்து திருவருளை நோக்கி, அதன் தன்மையை அறிந்து, மேலும் தீவிரமாகத் தன்னையும் தனது தலைவனையும் அறிந்து கொள்ளும் முயற்சியில் இறங்குகிறது. இதுவரை திரோதான சக்தியாக இருந்த திருவருள் அருட்சக்தியாய் தன்னை மாற்றிக் கொள்கிறது.

இந்த நிலையில் சாதகனின் ஈடுபாடும் முயற்சியும் மேலும் வலுவடைகிறது. முன்னம் பிறவிகளில் செய்த தவம் இதற்குப் பெரிதும் உதவுகிறது.

அதே நேரத்தில், வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் இன்ப, துன்பங்கள், ஏற்றத் தாழ்வுகள் போன்றவை நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. ஆழ்மனம் கேள்விகளை எழுப்புகின்றது. விடை நாடி பல இடங்களுக்குச் செல்கிறோம். அறிஞர்களையும், ஞானிகளையும் சந்தித்துத் தெளிவு பெற விரும்புகிறோம். ஆனாலும் தெளிவு கிடைப்பதில்லை. சலிப்பு ஏற்படுகிறது. இறைவனை நாடுகின்றோம். சிறிது ஒளி தோன்றுகிறது. ஞானத்தில் தன்மை இருண்ட மேகங்களிடையே பளிச்சென்று பிரகாசித்து மறையும் இருளைப்போன்று, உள்ளத்தில் பட்டும் படாததுமாக விளையாடுகிறது.

பிறந்தது முதல், பயனுள்ளவற்றைச் செய்யாமல் காலத்தை வீணாக்கிய உணர்வு

உள்ளத்தை வாட்டுகிறது. "பயப்படாதே காலத்தை நீட்டிக் கொடுக்கின்றேன். நல்ல வழியில் சென்று காலத்தை வீணாக்காமல் நற்பணிகளை மேற்கொள்ளும் தன் முனைப்பை விட்டு, உன் உள்ளத்தில் ஒளிமயமாய் நின்று கொண்டிருக்கும் சுடர் விளக்கைப் பார்த்துத் தெரிந்துகொள்" என்கிறான் இறைவன். நாம் தெரிந்து கொள்வதில்லை. உறவும் உலகமும் நம்மைப் பிணைத்து வைத்திருக்கின்றன. நமது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்கிறார் திருமூலர் பெருமான்.

**"ஆண்டு பலவும் கழிந்தன அப்பனைப்**
**பூண்டு கொண்டு ஆரும் புகுந்தறிவார் இல்லை**
**நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினும்**
**தூண்டு விளக்கின் சுடரறி யாரே"**

(திருமந்திரம் 178)

இறைவனைத் தெரிந்து கொள்வது என்பது ஒரு அனுபவம். அதற்கு மேலான அனுபவம் இல்லை, நமது அறிவுக்கு அப்பாற்பட்ட அனுபவம். அதைப் பெறுவதற்கு நம்மைத் தகுதி உடையவர்களாக்கிக் கொள்ள வேண்டும். நமது வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும். கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களுக்கு தலையாய இடம் கொடுக்க வேண்டும். நமது வாழ்க்கையை அறநெறியுடன் இணைத்து நடத்திச் செல்ல வேண்டும். உயர்ந்த கொள்கைகளை மேற்கொண்டு தேவையான எல்லாப் பணிகளைச் செய்தும், கீழ்மைப்படுத்தும் இச்சைகளை அறவே நீக்கி, இறை உணர்வைத் தரும் எல்லா செயல்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதுவே தவ நெறியாகும். அத்தகைய நெறியைச் சிறப்பாகப் போற்றி அந்நெறியில் நிற்கும் ஆற்றலை வளர்க்க வேண்டும்.

நமது உடல் வினை உடல். பிறவி தோறும் மனதாலும், வாக்காலும், உடலாலும் நாம் செய்யும் வினைகளைத் தூய்ப்பதற்கே இறைவன் இந்த உடலைத் தருகின்றான். இதை அறிந்து கொள்ளாமல் மேலும் பல வினைகளைச் செய்து வினைக் கடலிலிருந்து கரையேற இயலாமல் தவிக்கின்றோம். அதற்கு இரண்டே வழிகள் தான் உண்டு என்கிறார் திருமூலர் பெருமான். வினைக்கடலில் சிக்கித் துயரடையும் போது அறமும், தவமும் மட்டுமே தோணியாகி துணை புரிகின்றன என்கிறார் பெருமான்.

**திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி**
**இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு**
**கிளைக்கும், தனக்கும் அக்கேடில் புகழோன்**
**விளைக்கும் தவம், அறம் மேற்றுணையாமே"**

(திருமந்திரம் 158)

காலம் பறந்தோடி விடுகின்றது, இறப்பும், பிறப்பும் முடிவின்றி மாறி மாறி வரும் கட்டாயத்திலிருந்து தப்பித்துக் கொண்டு வெளிவரும் ஒரு முயற்சியும் எடுப்பதில்லை. நாம் பெற்ற கல்வியும், வெற்றியும், வரலாற்று ஏடுகளாகி, சிலகாலத்தில் அழிந்து விடுகின்றன. உடலின் ஆற்றல்களை இயற்கை பிழிந்து உடலைச் சக்கை போல் ஆக்கி விடுகிறது. தன் கண் முன் எல்லாம் அழிவதை மனிதன் பார்க்கின்றான். ஆனால், இவற்றையெல்லாம் கடந்து நிலைபேறுடைய இடத்தைக் கண்டு பிடித்து, அங்கே சென்றடைய வேண்டும் என்பதற்கான அறங்களைப் பற்றி மனிதன் சிந்திப்பதில்லை. திருமூலர் பெருமான் அருளும் மந்திரத்தில் எத்துணை ஆழம் :

(தொடரும்)

OOO

## பக்தியின் வழிகள்

ஸ்வரவணம் - காதால் கேட்பது
ஸ்மரணம் - மனத்தில் இருத்துதல்
வந்தனம் - கீழ்ப்படிதல்
அர்ச்சனை - மனத்தால் வணங்குவது
பாதசேவை - தன்னை மறந்து பகவானுக்குத் தொண்டு செய்வது
தாஸ்யம் - தொண்டனாகவே தன்னை மாற்றிக் கொள்வது
ஸக்யம் - நன் மதிப்புள்ள நண்பனாகக் கருதுவது
ஆத்ம நிவேதனம் - சரணாகதி.
கீர்த்தனை - தோத்தரித்தல்

# நரமுக கணபதி எழுந்தருளிய

# திலதர்ப்பணபுரி

முன்னோர்களுக்கு தர்ப்பண, தானங்கள், சாந்தி பூஜைகள், மோட்ச தீபங்கள் மேற்கொள்வதற்கு விஷேடமான திருத்தலம்.

மனித முகத்துடன் விநாயகர் காட்சி அளிக்கின்ற கோயில், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டத்தில் திருவாரூர் என்னும் இடத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் ஸ்ரீ சுவர்ணவல்லி அம்பிகா ஸமேத ஸ்ரீ முக்தீஸ்வரர் ஆலயத்தில் அமைந்துள்ளது. திருத்திலதைப்பதி மதிமுத்தம் என திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றது.

இவ்வாலயத்தில் ஸ்ரீ ராமபிரான் அவரது தகப்பனார் தசரதருக்காகவும், ஜடாயு என்ற பட்சி ராஜாவிற்கும் சிரார்த்தம், பிண்டம் வைத்து, தர்ப்பணம் செய்த தலம் ஆதலால் இவ்வாயத்திற்கு திலதர்ப்பணபுரி என்ற வடமொழி பெயரிலும் இவ்வாயலம் சிறந்துவிளங்குகின்றது.

இவ்வாலயத்தில் முன்னோர்கள் சாபங்கள் மற்றும் மாத்ரு சாபம், பித்ரு சாபம், கோ சாபம், குரு சாபம், சுமங்கலி சாபம், பிரம்மச்சாரி சாபம், தெய்வ சாபம், நதி சாபம், விருட்ச சாபம், பூமி சாபம், சமுத்திர சாபம் மற்றும் அனைத்து விதமான சாப பாபங்களையும் போக்கக் கூடிய தலமாக விளங்கி வருகின்றது.

இவ்வாலயத்தில் நாம் முன்னோர்களுக்கு செய்ய வேண்டிய திதி(சிரார்த்தம்), தர்ப்பணம், தானங்கள், மோட்ச தீபம், அன்னதானம், ஆத்ம சாந்தி, பித்ரு பூஜைகள் செய்து முன்னோர்களின் அஷ்க்ரஹம் பெற ஏற்ற கோவிலாகவும் விளங்கி வருகின்றது.

இவ்வாலயத்தில் ஈசான மூலையில் ஆதி விநாயகர் என்ற பெயர் கொண்டு மனித முகத்தோடு நரமுக கணபதியாக மேற்கு நோக்கி தனி சன்னதி கொண்டு அருள்புரிந்து வருகிறார். இவருக்கு பாசம், அங்குசம் என்ற இரண்டு ஆயுதங்களும், ஆனந்த முத்திரை, ஊரு ஹஸ்தம் என்ற இரு கரங்களோடும் ஒரு காலை மடித்துக் கொண்டும், மற்றொரு காலை தொங்க விட்டுக் கொண்டு சுகாசணத்தில் அருள்புரிந்து வருகின்றார்.



இந்த ஆதிவிநாயகர் முன்னொரு காலத்தில் பார்வதி தேவியின் திருமணக் காலத்தில் தேவர்கள் எல்லாம் சேர்ந்து திருமண வைபவங்களை நடத்தும் பொழுது சில இடையூறுகள் தோன்ற அனைவரும் பார்வதி தேவியிடம் வினவும் போது தன் கரங்களை பிசைந்து அதிலிருந்து தோன்றிய மஞ்சள் உருண்டையை பிம்பமாக பிடித்து வைத்து பிரார்த்தனை செய்து கொள்ளும்போது அதிலிருந்து அழகான ஓர் திருவுருவம் தோன்றியது. உடனே அன்னை பராசக்தி உருவத்தை பார்ப்பது நிற்காரியங்கள் செய்யும் பொழுது உன்னை வேண்டியவர்களுக்கு வினைகள் போக்கும் விநாயகராக அருள்புரிவாயாக எனக்கூறியதும், உடனே அவ்விநாயகர் தேவர்கள் இடையூறுகளை போக்கி இறைவனின் திருக்கல்யாண வைபவத்தை செவ்வனே செய்து வைத்ததாகவும் புராண வரலாறுகள் கூறுகின்றன.

இவ்வாலயத்தை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஸ்ரீ முக்தீஸ்வரர் மற்றும்
ஸ்ரீ ஆதிவிநாயகர் ஆலயம்,
திருத்திலதைப்பதி-செதலபதி
பூந்தோட்டம் அஞ்சல், நன்னிலம் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 609 503.
போன் : 04366-238818, 239700


# விபூதி

**விபூதி என்பது :**

புல்வெளியில் மேய்ந்த இளம்பசுவின் சாணத்தை அக்னியால் நீற்றி எடுக்கும் பொடியே விபூதியாம்.

**விபூதியை வைத்துக் கொள்வது:**

புதுத் துணியால் வடிகட்டி மணமுள்ள புஷ்பங்களையிட்டு புதுப்பானையில் வைத்துக் கொண்டு அவசியத்துக்கு தக்கபடி பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது எடுத்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.



**விபூதி அணிவதின் அவசியம்**

அசுத்தங்களை, சாணம் அகற்றுவது யாவரும் கண்டறிந்த உண்மை. அதுபோலவே நமது உடலிலுள்ள அசுத்தங்களை அகற்றவும், சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் விபூதி மிகவும் அவசியமான தாகும். சிரசிலுள்ள நீர் தோஷம், தலைவலி முதலியவற்றை அகற்றவும் இது பயன்படுகிறது.

அன்றியும் இத்திருநீறு “முடிவில் யாவரும் ஒரு சாம்பலாவர்“ என்ற உண்மையை நமக்கு உணர்த்தி, “நீயும் இத்தகைய நீராய்ச்சிறிது காலத்திற்குள் முடிவாய் ; ஆதலால் உன் வாழ்க்கை தூய்மையுடனும், இறைவன் மீது உற்றபற்றுடனும் இருத்தல் வேண்டும்“ என நம்மை எச்சரிக்கிறான். பசுவின் மலம் நீராகிய பின்னரே ஜீவன் சிவனாகிறான் என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. எனவே, விபூதி மத சம்பந்தமாகவும், ஆரோக்கியம் சம்பந்தமாகவம் பயன் படுத்துதலின் நமக்கு இன்றியமையாததாகும்.

**விபூதியை தரிப்பது:**

வடக்குமுகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் நின்று பூமியில் விபூதி சிந்தாதபடி மூன்று விரல்களால் எடுத்து அன்னாந்து 'சிவசிவ' என்று சொல்லி சிவனைத் தியானித்து பூசுதல் வேண்டும்.

**விபூதி அணிதல்**

காலை மாலைகளிலும், குளித்தவுடனும் பூஜைக்கு முன்னும், ஆலய வழிபாட்டுக்கு முன்னும், சாப்பாட்டிற்கு முன்னும் பின்னும் அணிதல் வேண்டும்.

**விபூதியை பூசுவது**

சமய தீக்ஷை முறைப்படி விபூதி தரிப்பதுதான் தகுதியுடையது. எனினும் தீக்ஷை பெற்றுக் கொள்ளும் வரை விபூதியை **தண்ணீரிலே குழைத்து**

ஈசான மூர்த்தியே நம: என்று சொல்லிச் சிரசிலும்

தத்புருஷ வக்த்ராய நம: என்று சொல்லி நெற்றியிலும்

அகோர ஹிருதயாய நம: என்று சொல்லி மார்பிலும்

வாம தேவ குஹ்யாய நம: என்று சொல்லி கொப்புழிலும்,

ஸத்யோஜாத மூர்த்தயே நம: என்று சொல்லி புஜங்களிலும், கைமூட்டுகளிலும், மணிக்கட்டுகளிலும், இடுப்புகளிலும் , கால் மூட்டுகளிலும், கழுத்திலும் தரித்துக் கொள்ளல் வேண்டும்.

**விபூதி பூசிய பின் :**

தீக்ஷை பெற்றவர்கள் குரு உபதேசித்தபடி பஞ்சாட்சர மந்திரத்தினை பலமுறை ஜபித்துக் கடவுளை வணங்கல் வேண்டும்.

## வேதம் ஆகமம் என்ற சொற்களுக்குப் பொருள் என்ன?

வேதம்- வித்து என்னும் பகுதி அடியாகப் பிறந்த சொல். எல்லாப் பொருள்களின் வித்துக்களையும் வேதத்தின் கண் காணலாம். எல்லாப் பொருள்கட்கும் மூலமாயுள்ளது வேதம்.

ஆகம என்ற சொல்லில் ஆ-பதியையும், க-பசுவையும் ம-மாயையையும் குறிக்கும். பதி-பசு-பாசங்களின் இலக்கணங்களை அறிவித்து, ஞானத்தை உண்டாக்கி இறைவன் திருவடி நிழலை அடையச் செய்வது ஆகமம்.

# கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான்



- ஜெயஉத்திரன்

துவாபரயுகத்தின் முடிவில் பூவுலகில் அதர்மங்கள் தலைவிரித்து ஆடத் தொடங்கின. அதர்மங்களை நீக்கி நல்லவர்களைக் காக்க கிருஷ்ணபட்ச அஷ்ட நாளில் நள்ளிரவில் ரோகிணி நட்சத்திரத்தில் கண்ணபெருமான் திருஅவதாரம் புரிந்தார்.

**“யதா யதாஹி தர்மஸ்ய கலானிர்பவதி பாரத அப்யுத்தான மதாமஸ்ய ததாத் மானம் ஸ்ருஜாம்யஹம்”**

எனக் கீதையிலே கண்ணன் தெரிவிக்கின்றான். பூவுலகில் எப்போது தர்மம் தலை சாய்த்து அதர்மம் அதிகரிக்கின்றதோ அப்போது பகவான் துஷ்டசம்ஹார சிஷ்ட பரி பாலகனாக அவதாரம் செய்கின்றார் என்பது இதன் பொருள்.



கண்ணன் கோகுலத்தில் வளர்ந்து, கோபியருடன் கொஞ்சிக் குலாவி, வெண்ணை திருடித் தின்று, ஆநிரைகளைக் காத்து, காளிங்கன் என்னும் கொடிய பாம்பினை அடக்கி, கம்சனை வதம் செய்து, பஞ்ச பாண்டவர்களுக்குத் தூதுவனாக போர்த் துணையாக நின்று, அனைத்து நலன்களையும் தந்து, அர்ச்சுனனுக்கு போர்க்களத்திலேயே ‘கீதோபதேசம்’ செய்து கௌரவர்களை அழித்து தர்மத்தை நிலை நாட்டினான்.

ஆழ்வார்கள் பாடிய அருட்பாடல்களில், தசாவதாரங்களுள் இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும் மிகவும் முக்கியமானவைகளாக எடுத்தாண்டுள்ளனர். ஏனெனில் இராமாவதாரமும் கிருஷ்ணா வதாரமும் மனித வாழ்க்கைக்கு பலவகைகளில் எடுத்துக் காட்டு. வாழும்போது ராமனைப் போல் வாழ வேண்டும் என்பர். மனித வாழ்க்கைக்கு சரியான வழிகாட்டும் ஆசானாக அமைந்து உபதேசம் செய்தவர் கிருஷ்ண பெருமான் ஆவார்.

அத்தகைய ஆசான் அவதாரம் எடுத்த நாள் ஆவணி மாதம் கிருஷ்ணபட்சத்து அஷ்டமியுடன் கூடிய ரோகிணி நன்னாள் ஆகும்.

ஆகவே, அந்நாளை நாம் வீடுகளிலும், திருக்கோயில்களிலும் ஸ்ரீ ஜெயந்தி, கோகுலாஷ்டமி, கிருஷ்ண ஜெயந்தி என்ற பெயர்களால் கொண்டாடுகிறோம்.

மாடு என்றால் செல்வம். செல்வம், ‘ஸ்ரீ’ என அழைக்கப்படும். கோகுலத்தில்

யாதவர்கள் வீட்டில் வளர்ந்த கண்ணன் பிறந்த நாளை ஸ்ரீ ஜெயந்தி என்றுஅழைக்கின்றோம்.

கோகுலத்தில் வளர்ந்த குழந்தை அஷ்டமி தினத்தில் அவதரித்ததால் கோகுலாஷ்டமி எனக் கொண்டாடுகிறோம்.

பட்சத்தில் முன் ஏழு நாட்கள் தவிர்ந்த எட்டாவது நாள் நடுநாளாகும். அந்நாளில் நடுநிலைமை தவறாத நாராயணன் 'கோபாலன்' என்னும் பெயரோடு தோன்றியதால் அந்த பட்சமே 'கிருஷ்ண பட்சம்' என அழைக்கப்படுகிறது.

அவனது பால்ய விளையாட்டுகளில் நமக்கு அதிக ஈடுபாடு என்பதனால் வீடுகளிலும், திருக்கோயில்களிலும், அவனது குழந்தை விளையாட்டுக்கள், சித்து செயல்கள் கொண்டாடப்படுகின்றன.

கிருஷ்ண ஜெயந்தியன்று வீட்டில் கண்ணனை எழுந்தருளச் செய்து பால், தயிர், வெண்ணை, நாவல்பழம், பிரப்பம் பழம், வாழைப்பழம், முறுக்கு, சீடை, அதிரசம், சீயம் ஆகியவற்றைப் படைக்கின்றனர்.

'வெண்ணை உண்ட வாயன்' என்பதனால் கோகுலத்தில் வெண்ணை திருடி உண்டு பக்கத்து வீட்டிற்குச் செல்லும் போது அதே வெண்ணைக் காலுடன் நடந்து தடம் ஏற்படுத்தினான்.

அதனை நினைவு கூர்வதற்காக மாவுக்காலால் கோலம் போட்டு வீட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கோலமிட்டுச் சென்று மனைப்பலகையில் நெய்வேத்தியங்களை வைத்துப் படைத்து பூசைசெய்யும் வழக்கம் இன்றும் உள்ளது.

திருக்கோயில்களில் குறிப்பிட்ட இடங்களில் உறியை மண்பானைகளிலோ, துணியிலோ கட்டி இதனைத் தடி கொண்டு அடிப்பதும், எதிரில் இருப்போர் நீரை ஒருவர் வாரி அவர்மேல் இரைப்பதும், வழுக்கு மரத்தின் மேலேறி உறி அடிப்பதும் அந்தந்தப் பகுதிகளில் நம் கலாச்சாரப் பண்பாட்டிற்கு ஏற்ப நிகழ்த்தப்படுகின்றன.

ஆழ்வார்கள் முதல், பாரதி, கவியரசு கண்ணதாசன் வரை அனைவரையும் கவர்ந்த குறும்புக்காரக் கண்ணன் ஆன்மீக பக்தர்களையும் தனது பண்டிகை வாயிலாக வெகுவாகக் கவர்ந்து உள்ளான் என்பதில் ஐயமில்லை.

⌘⌘⌘



## திருமால் மோவாயில் கற்பூரம்

திருமால் அடியார் அனந்தாழ்வாரின் மனைவி சுமந்து சென்ற மண் கூடையை தொலைவிலே கொட்டி வந்து சேருவதற்கு அதிசயமாக மிகக்குறைந்த நேரமெடுப்பதை ஆச்சரியத்துடன் அதிசயித்து அவர் வினவினார். தனக்கு, ஓர் இளைஞன் விரைந்து கொட்ட உதவுவதாக அவர் மனைவி பதில் கூறினார்.இத்தம்பதியருக்கு திருமாலே இளைஞனாக உருவெடுத்து உதவுவதை அறியாத அனந்தாழ்வார், அழையாத விருந்தாளியாய் வந்துதவிய இளைஞனை வெறுத்து மண்வெட்டியால் அவன் மோவாயில் ஓங்கி அடிக்க, திருமலை திருவேங்கடமுடையான் மோவாயிலும் குருதி பெருகியது. அவதாரத்தை உணர்ந்த அனந்தாழ்வார் காயத்தில் கற்பூரத்தை அழுத்தி முதலுதவி செய்தார். இதன் விளைவாகவே இன்றும் வேங்கடமுடையானின் மோவாயில் கற்பூரம் அர்ப்பித்து, அது பிரசாதமாக வழங்கப்படுகிறது.



***சிவனுக்கும், சீவனுக்கும் உள்ள வித்தியாசம் முதலெழுத்தின் தலையில் ஒரு சுழிதான். தலையில் சுழி உள்ளது சீவன்; தலைச்சுழி இல்லாதது சிவன்.***

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2004 ஆகஸ்ட் 15 ஆம் நாள் சுதந்திர தினவிழாவில் கொடியேற்றி வைத்து வணக்கம் செலுத்துகிறார்**





## 2004 ஆகஸ்டு 15 திருக்கோயில்களில் சமபந்தி பொது விருந்து




சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் மாண்புமிகு நிதியமைச்சர் சி. பொன்னையன், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் பி.சி.இராமசாமி மற்றும் ஆணையர் திருமிகு ஜி.இராமகிருஷ்ணன் அவர்கள்



திருவேற்காடு அருள்மிகு கருமாரி அம்மன் திருக்கோயிலில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு.சி.பொன்னையன்அவர்கள், மாண்புமிகு அறநிலையத்துறைஅமைச்சர் திரு.பி.சி.இராமசாமி அவர்கள் மற்றும் தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை செயலர் திரு. பி.ஏ. ராமையா, அறங்காவலர்குழுதலைவர் திரு.எம்.நந்தகோபால்


மயிலை அருள்மிகு கபாலீஸ்வர
AISHWARYA


மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகக் காட்சிகள்
30.08.2004


# திருவிளையாடல் புராணம்

## 3. திருநகரங்கண்ட படலம்

இரா. அரங்கசாமி

கடம்ப வனத்தின் கீழ்த்திசையில் "மணவூர்" என்னும் நகரைக் குலசேகரன் என்ற பாண்டிய மன்னன் ஆண்டு வந்தான். அவ்வூரில் சிவபெருமானிடம் மிகுந்த அன்பு பூண்ட 'தனஞ்சயன்' என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவ்வணிகன் மேற்குத்திசையில் உள்ள பல ஊர்களில் வணிகம் செய்துவிட்டுக் கடம்ப வனத்தின் வழியாகத் தன் ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். இரவு நேரம் ஆகிவிட்டதால் அவன் மிகவும் வருந்திக் கொண்டிருந்தான். சூரியன் போல் ஒளி வீசும் விமானத்தை நேரில் கண்டான். அதில் எழுந்தருளியுள்ள சொக்கநாதப் பெருமானைக் கண்டு மகிழ்ந்து வணங்கி இரவுப் பொழுதை அங்கேயே கழித்தான்.

அன்று இரவு சோமவாரம் ஆதலால் அங்கே தேவர்கள் வந்து இரவு முழுவதும் சொக்கலிங்க மூர்த்திக்கு நான்கு யாமங்களிலும் விசேட பூஜை செய்தனர். அதனை வணிகன் கண்டான். இரவு விடிந்தது. தனஞ்சயன் இறைவனை வணங்கி விடைபெற்றுத் தன் ஊர் வந்து சேர்ந்தான். அவன் நேரே அரசனின் மாளிகையை அடைந்து அரசனிடம் நடந்ததைத் தெரிவித்தான். அதைக் கேட்ட குலசேகரபாண்டியன் மிக்க அதிசயம் அடைந்தான். இறைவன் திருவருளை எண்ணி மகிழ்ந்தான்.



அன்று பகல் கழிந்து இரவு வந்தது. அன்று இரவில் பாண்டியன் கனவில் இறைவன் ஒரு சித்தராய்த் தோன்றினார். "பாண்டியனே! கடம்ப வனத்தில் உள்ள காட்டை அழித்து அழகிய நகரமாகச் செய்வாயாக!" என்று கூறி மறைந்தருளினார். குலசேகரபாண்டியன் திடுக்கிட்டு விழித்தெழுந்து விடியும் வரை காத்திருந்தான். மறுநாள் அமைச்சர்களையும், தவத்தில் சிறந்த முனிவர்களையும் அழைத்துத் தான் கனவில் கண்டவற்றை அவர்களிடம் கூறினான். பின்னர் அவர்களுடன் ஆராய்ந்து மேற்கு நோக்கிப் புறப்பட்டான்.

பாண்டியன் தன் அமைச்சர்களோடு பெரிய கடம்பவனத்தை அடைந்தான். பொற்றாமரைத் தடாகத்தில் நீராடினான்; பொன் விமானத்தில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்தான். பாண்டியன் ஏவலால் அமைச்சர்கள் பல பணியாளர்களை நாலாபக்கமும் இருந்து அழைத்து வரச் செய்தனர். காடுகளை வெட்டித் திருத்தினர். பெரிய நிலங்களைச் செப்பம் செய்தனர். நகரம் உண்டாக்குவது எப்படி என்று பாண்டிய மன்னன் ஆராய்ந்து கொண்டிருந்தான்.

அப்போது இறைவர் ஒரு சித்தராய் அங்கு எழுந்தருளினார். பாண்டியன் எழுந்து வணங்கி வரவேற்றான். அச்சித்தர் அமர ஆசனம் கொடுத்தான். உடனே சித்த மூர்த்திகள் நாம் முன்னே கூறியருளியபடி சிவாகமத்தின் வழியே தோன்றிய சிற்பநூல் முறைப்படி ஆலயமும், மண்டபமும், கோபுரமும், நகரமும் இன்னவாறு செய்தல் வேண்டும் என வகுத்துரைத்து மறைந்தருளினார்.

சித்த மூர்த்திகள் கூறியவண்ணமே திருக்கோயில், திருநகரம் போன்றவற்றைப் பாண்டியன் உண்டாக்கினான். இவ்வாறு பாண்டியன் அந்நகரை உண்டாக்கிய பின்னர்

## திருவஹீந்தரபுரத்தில்

# சிவனாய் வந்த திருமால்



ஒரு சோழ மன்னன் திருவஹீந்தரபுரம் திருமால் திருக்கோயிலை இடித்துவிடும் நோக்குடன் அவ்வூர் வந்தபோது, ஆடுமேய்க்கும் சிறுவர்கள் அக்கோவிலை சிவன் கோவில் எனக் கூற, மன்னன் திரும்பிச் சென்றுவிட்டான். சோழ மன்னனுக்கு திருமால் சிவனாகவே காட்சி தந்தார். இவ்வைணவத் திருக்கோயிலில் தெற்கே சிவ உருவாகிய தட்சிணா மூர்த்தியும், மேற்கே நரசிம்மனும், வடக்கே பிரம்மாவும் விமானத்தில் அமைந்திருப்பது எங்கும் காணக் கிடைக்காத அரிய காட்சி.

அந்நகருக்குச் சாந்தி செய்யக் கருதினான். அப்போது சோமசுந்தரக் கடவுள் தமது சடையில் உள்ள சந்திரக் கலையின் புத்தமுதத்தைச் சிந்தினார். அது அந்நகர் முழுவதையும் அமிர்தமயம் ஆக்கித் தூய்மை செய்தது. அவ்வமுதம் நல்ல மதுரமாகிய தன்மையினாலே அந்நகருக்கு மதுராநகர் எனப்பெயர் வந்தது.

பின்னர் குலசேகரபாண்டியன் மதுரை மாநகரின் கிழக்குத் திசையில் ஐயனாரையும், தென்திசையில் சப்தமாதரையும், மேற்கில் திருமாலையும், வடக்கில் பத்ரகாளியையும் காவலாக நிறுவினான். சிவாகம முறைப்படி பூசை செய்யக்காசிப்பதியில் இருந்து முனிவர்களையும், பிராமணரையும் அழைத்து வந்தான்.

இவ்வாறு குலசேகரபாண்டியன் பாண்டியநாட்டிற்கு ஒரு திலகம் பதித்தாற்போன்று நாட்டை வளப்படுத்திச் சிறப்புடன் ஆண்டான். அவனுக்கு மலயத்துவசன் என்னும் மகன் பிறந்தான். அவனிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு, சிவபூசையில் ஈடுபட்டுக் குலசேகரபாண்டியன் சிவத்துடன் இரண்டறக் கலந்தான்.

நன்றி: இராமலிங்கர் பணி மன்றம்
சென்னை

## மகேசன்

ஆண்டவனது உருவத் திருமேனிகளான, மகேசன், உருத்திரன், மால், அயன் என்ற நான்கினுள்ளும் முதலாவதும், தலை சிறந்ததுமான உருவத்தைக் கொண்டவரே இவர். இவர் ஈசுவரன் என்றும் அழைக்கப்படுவார்.

## குட்டுப் பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்பட வேண்டும்.

பழங்காலத்தில் மன்னர், அமைச்சர், படைத்தலைவர் முதலானோரை நியமிக்கின்ற போது அவர்களுக்கு அரசு முத்திரை பதித்த மோதிரங்களை அணிவிப்பது வழக்கம். இத்தகைய மேன்மக்கள் அறிவு, ஆற்றல், நீதி, தருமம் நிறைந்தவர்கள் ஆவர். குட்டுபட்டாலும் உயர்தகுதிகள் பெற்ற இவர்களிடம் குட்டுப் பெறலாம். கீழ் மக்களிடம் குட்டுப் பெறுவது அவமானம். மோதிரக்கை = அரசு முத்திரை மோதிரம் அணிந்த கை. மேன்மக்கள் நீதியும் நியாயமும் இருந்தாலே பிறரைக் குட்டித் தண்டிப்பார்கள்.

**மோதகக் கையான் குட்டு :**



மோதகக் கையான் = பிள்ளையார். "மோதகக்கையான் குட்டு" என்ற தொடர் "மோதிரக்கையால் குட்டு" என்று மாறி இருக்கலாம்.

அதாவது, பக்தர்கள் விநாயகரை வழிபடுகின்ற போது தம்மைத்தாமே குட்டிக் கொண்டு வழிபாட்டுக் குட்டைப் பெறலாம்.



**முன்காலத்தில் வழிப்போக்கர்கள், ஏழைகள் தங்குவதற்காக
வீட்டிற்கு முன் திண்ணை கட்டினார்கள்.
இப்போது உள்ளவர்கள்
வீட்டிற்கு முன் நாயைக் கட்டுகிறார்கள்.**

# காலச் சுவடுகள்



அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்,
மருதமலை — கோயம்புத்தூர்.

மக்கள், நலம் பேண, நன்னோக்கம்வளர
நன்மக்களாக செயல்பட [illegible]
[illegible] மருதமலையின் சிகரத்துள்ள
திருக்கோவிலைக் காணவும் [illegible]
[illegible] பெற்று நான்
[illegible] பேறு பெற்று [illegible]
இந்தக் கோவிலுக்கு மக்கள் [illegible]
[illegible] எல்லா வழிகளிலும்
உதவியும் தன்னலம் [illegible]...
திரு. ம.ம.அ. சின்னப்பாத்தேவர் அவர்
களுக்கும் அவர்தம் உதவினர் கட்கும்
எல்லா நலன் களும் கிடைக்க...
ஆண்டவனும் என்றும் அருள்புரிவானாக
கோவில் நிர்வாகிகள் [illegible]
செயல்படுவது [illegible]
[illegible]
தொடர்ந்து செயலாற்றக் கோரும்.

அன்பன்
எம்.ஜி. ராமச்சந்திரன்
10.10.67



முன்னாள் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களுக்கு 1980ஆம் ஆண்டு பொற்பணித் தொழிலாளர்கள் அளித்த வெள்ளி வாளினை இத்திருக்கோவில் மூலவர் மருதமலையான்பால் அளவற்ற அன்பும், ஆத்மார்த்தமான நேசமும் கொண்டு திருக்கோவிலைப் பிரபலமாக்கிய மறைந்த சாண்டோ சின்னப்பதேவர் நினைவாக திருக்கோவிலுக்கு வழங்கினார். இருவர் நினைவாகவும் இவ்வாள் திருக்கோவில் மகாமண்டபத்தில் கண்ணாடிப் பேழையில் பக்தர்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

10.10.1967ல் முன்னாள் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வருகை தந்த போது திருக்கோயில் முக்கிய பிரமுகர் பதிவேட்டில் தன் கைப்பட பதிவு செய்த குறிப்பு.

# வணங்குவதற்குரிய தாவரங்கள்

நாங்கள் மரங்களை நேசிக்கிறோம். நீங்கள்? (We love trees. Do you?) என்று சற்றே இளக்காரமாகக் கேட்டார், ஒரு வெள்ளைக்கார பாதிரி நண்பர்.

ரசிகமணி டி.கே.சி பதில் சொன்னார். "நாங்கள் மரங்களை ஏதோ நேசிக்க வில்லை; நாங்கள் அவைகளை வழிபடவும் செய்கிறோம்!" (We don't love trees; we worship them!)

தமிழ்நாட்டிலுள்ள ஏராளமான தலங்களில் சில தலங்களையும் அவற்றின் தலமரங்களையும் பார்ப்போம்;

**வில்வ மரம் :** திருத்துறைப்பூண்டி, திருப்பதி (ஆமாம், சாட்சாத் ஏழுமலையான் கோவில்!); உள்ளிட்ட ஏராளமான திருத்தலங்கள்.

**வன்னி :** திருப்பாண்டிக் கொடுமுடி (தற்சமயம் கொடுமுடி); திருவான்மியூர் உள்ளிட்ட பல திருத்தலங்கள்.

**பனை :** திருப்பனந்தாள்; திருப்பனையூர், திருப்பனங்காடு உள்ளிட்ட பல திருத்தலங்கள்.

**வாழை :** திருக்கழுக்குன்றம், திருமருகல் உள்ளிட்ட பல திருத்தலங்கள்

**பவ்ழமல்லி :** கும்பகோணம் பகுதியிலுள்ள திருநறையூர் என்று அழைக்கப்படும் திருநறையூர்ச் சித்தீச்சரம்;

**எருக்கு :** ஸ்ரீமுஷ்ணம் பகுதியிலுள்ள திரு எருக்கத்தம் புலியூர்;

**முல்லை :** வட திருமுல்லைவாயில்; சீர்காழி அருகே, தென்திரு முல்லை வாயில்.

**பலா :** திருவீழிமழலை (குடவாசல் வட்டம்); திருக்குற்றாலம் - குறும் பலா என்ற தனி வகை.

**எலுமிச்சை :** தொண்டை நாட்டு மாகறல்;

**நெல்லி:** திருவாவினன்குடி; திருநெல்லிக் காவல்;

**நாவல் :** திருநாவலூர்; திருவானைக்கா (வெண்ணாவல் என்ற வகை)

**மாவிலங்கை :** திருச்சேறை; திருநாட்டியத்தான் குடி

**வேல மரம் :** திருவேற்காடு

**மல்லிகை :** தொண்டை நாட்டு எலுமியன் கோட்டூர் எனப்படும் இலம்பையங் கோட்டூர்.

**தேவதாரு :** மயிலாடுதுறை கொல்லுமாங்குடி சமீபம் வழுதூர் வீரட்டம்.

**இலந்தை :** காஞ்சி - வந்தவாசிச் சாலை தூசி கிராமம் அருகே குரங்கணில் மூட்டம்;

**மகிழமரம் :** காளஹஸ்தி; திருவொற்றியூர்;


**அழிஞ்சில் :** சென்னையை அடுத்துள்ள பொன்னேரி அருகேயுள்ள சின்னக்காவானம் என்னும் கிராமத்தில் அஷ்டோத்திர புரீவரர் ஆலயத்தில் இருக்கிறது. வேதவித்து என்று புகழப்படுவது.

**கிளுவை :** மயிலாடுதுறைப் பகுதியிலுள்ள கீழையூர் எனப்படும் திருக்கடைமுடி.

**மா மரம் :** காஞ்சீபுரம்; லால்குடி சமீபம் மாந்துறை;

**பாதிரி :** சென்னையைச் சேர்ந்த பாடி - திருவலிதாயம்; திருப்பாதிரிப்புலியூர்; திருவாரூர்;

**புன்னை :** மயிலாப்பூர்; திண்டிவனம் - பாண்டிச்சேரி பகுதியிலுள்ள இரும்பை எனப்படும் திருஇரும்பை மாகாளம்;



**தாழை :** திருமயேந்திரப்பள்ளி (இப்போது மகேந்திரப் பள்ளி என்று அழைக்கப்படுகிறது).
**வேம்பு :** வைத்தீஸ்வரன் கோவில் (புள்ளிருக்கு வேளூர்)
**கருங்காலி :** அம்பர் மாகாளம் (திருமாகாளம்)
**விளா :** மயிலாடுதுறையிலிருந்து ஏழு கி.மீ. தொலைவிலுள்ள திருநின்றியூர்.
**புங்க மரம் :** நந்தனாருக்காக நந்தி விலகிய தலமான திருப்புன்கூர்.
**கடம்பு :** திருக்கடம்பூர் (சோழ நாட்டுத் தலமான மேலக் கடம்பூர்); தற்போது குளித்தலை எனப்படும் கடம்பந்துறை;
**சந்தன மரம் :** திருவழுந்தூர் (தேரழுந்தூர்); ஸ்ரீவாஞ்சியம்.
**புன்னாகம் :** குமராட்சி அருகே திருநாரையூர்.
**ஆத்தி (அத்தி) :** திருப்பனந்தாள் அருகேயுள்ள திருவாய்ப்பாடி என்னும் திரு ஆய்பாடி .
**தென்னை :** வட குரங்காடு துறை (தற்போது, ஆடுதுறை பெருமாள் கோவில் என்பதாக அழைக்கப்படுகிறது. திருவையாற்றிலிருந்து ஐந்து கி.மீ.) திருநெல்லிக் காவல் அருகேயுள்ள திருத்தங்கூர் எனப்படும் திருத்தெங்கூர்.
**நந்தியாவர்த்தம் :** கோயில்வெண்ணி.
**இலுப்பை :** திருச்செங்கோடு எனப்படும் கொடி மாடச் செங்குன்றூர்
**ஆலமரம் :** விருது நகர் மாவட்டம் திருத்தண்கால், நின்ற நாராயணப் பெருமாள் கோவில்;
**ஆமணக்கு :** கொட்டையூர் (கும்பகோணம் புறநகர்)
**பராய் மரம் :** திருப்பராய்த் துறை
**வீழிச்செடி :** திருவீழிமழலை
**படர் அரசு :** திருவாவடு துறை
**வாகை :** திருவாழ்கொளிப்புத்தூர்.
**பாலை :** பாபநாசம் சமீபம் திருப்பாலைத்துறை
**அரசு :** திரு அரசிலி(ஒழிந்தியாம் பட்டு - திண்டிவனம் - பாண்டிச்சேரி பகுதி);
**குரா மரம் :** கோடியக்கரை எனப்படும் திருக்கோடிக்கா
**தர்ப்பை :** திருநள்ளாறு (சிவன் கோவில் - சுவாமிக்குப் பெயரே தர்ப்பாரண்யேஸ்வரர்.)
**மந்தாரை :** திலதர்ப்பணபுரி என்று பிதிரர்கடன்களுக்கு உரிய க்ஷேத்திரத்தின் இன்றைய பெயர் திலதைப்பதி.
**சிலந்தி மரம் :** திருப்பயத்தங்குடி எனப்படும் திருப்பயற்றூர். இந்த மரத்தின் மலர், சிலந்திப் பூச்சி வடிவம் கொண்டது; மஞ்சள் நிறம். வசந்த ருது (சித்திரை - வைகாசி) காலத்தில் பூக்கும், மணம் உண்டு; இலை, புன்னை மர இலை போல் இருக்கும்.

சிதம்பரம் க்ஷேரத்திரத்தின் தலமரம் - தில்லை. இந்த மரம் அந்த ஊரில் இல்லை. கடலோரமுள்ள பிச்சாவரத்தின் அருகே உப்பங்கழிக் கரையில் காணப்படுகிறது.

(மருத) அர்ஜீன் க்ஷேத்திரங்கள், மூன்று, புடார்ஜீனம் என்பது, அம்பாசமுத்திரம்; மத்யார்ஜீனம் என்பது, திருவிடைமருதூர்; மல்லிகார் ஜீனம் என்பது ஸ்ரீ சைலம் எனப்படும் திருப்பருப்பதம். இந்தத் தலத்துக்குரியது, மருதமரம்.
**குருந்தை :** தண்டலச்சேரி என்று வழங்கப்படும் தண்டலை நீள்நெறி; திருப்பெருந்துறை (ஆவுடை யார் கோவில்)
**கோங்கு இலவு மரம் :** கச்சனம் எனப்படும் கைச்சினம்.
**பஞ்ச வில்வம் :** திருநீலக்குடி
**கல்லால மரம் :** சிதம்பரம் பகுதியிலுள்ள திருக்கூடலையாற்றூர்.
**தேற்ற மரம் :** திருக்கோளிலி (திருக்குவளை - திருவாரூர் பகுதி)

## ஆற்காடு நவாபு வழங்கிய தங்கத் தொப்பி

ஆற்காடு நவாபு திருவெட்டாற்றில் இருந்த உற்சவரைத் தங்கச் சிலை என எண்ணிக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டான். அதன்பின் தாங்கொணாத துயரங்கட்கு ஆட்பட்ட நவாபு தமது தவறுகளை உணர்ந்து பிராயச்சித்தமாகத் திருவெட்டாற்றுக் கோவிலுக்கு 388 தோலா எடையுள்ள தங்கத் தொப்பியும், தங்கத் தகடும் வழங்கினான்.

## திருமால் அல்லது மஹாவிஷ்ணு


ஏகநாயகன் உலகத்தைப் படைத்து, அளித்து அழிக்கக் கொண்ட மும்மூர்த்தங்களில் காத்தல் தொழிலைக் கொண்ட கடவுள் இவர்.



**படிக்கும் மாணவனுக்குத்தான் பரீட்சைக் கவலை. ஊரைச் சுற்றுபவனுக்கு அது ஏது? அதுபோல், ஞானமார்க்கத்தில் செல்பவனுக்குத் தான் துன்பம். மூர்க்கனுக்கு அது ஏது?**

# அன்னதானம்

டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்



உலகத்திலுள்ள மக்கள் வீடுபேறடைவதற்குச் சாதனமாக இருந்து உபகரிப்பது அறம் ஒன்றேயாம். நாம் சம்பாதித்த பொருள் இந்த சென்மத்தில் மட்டும் உதவி செய்யும். நாம் செய்யும்அறமோ மறுமைக்கும் வந்து உதவி செய்யும்.

"பொங்கார வேலையில் வேலைவிட்
டோனருள் போலுதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க் கிட்டது;
இடாமல் வைத்த
வங்கார மும்உங்கள் சிங்கார வீடு
மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனி
வழிக்கே"

என்று அருணகிரிநாத சுவாமிகள் உபதேசித்துள்ளார். எத்தேசத்தில், எக்குலத்தில், எந்தப் பிறப்பில் பிறந்தாலும் நாம் இப்பொழுது இங்கு செய்யும் அறம் பின்தொடர்ந்து வரும். ஔவை நமக்கு உபதேசிக்க வந்த போது முதலில் "அறஞ்செய விரும்பு" என்று வற்புறுத்தியுள்ளார். அந்த அறமாவது பலதிறப்பட்டுளது. அவற்றில் தானம், தருமம் என்ற இருவகை சிறந்து விளங்குகின்றன. இந்த இருவகையில் முதலாவதாக நின்ற தானத்தில் பூதானம், கோதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், சுவர்ணதானம் எனப்பலப்பல கிளைகளுண்டு, இவற்றுள் தலைசிறந்து விளங்குவது அன்னதானம் ஒன்றேயாகும். இதனை எல்லாச் சமயத்தவரும், எத்திறப்பட்டோரும் சங்கை இன்றி ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதற்குச் சமமானது முன்னுமில்லை. பின்னுமில்லை. எதனால் அன்னதானம் உயர்ந்தது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

உயிர்கள் அன்னத்தைத்தான் முக்கிய ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றன. பசித்தோருக்கு அன்னத்தைக் கொடுத்தால் உயிரைக் கொடுத்தது போலாகும்.

குஷ்டம், க்ஷபம், சூலை முதலியவைகளில் எத்துணைக்கொடிய நோய் ஒருவனுக்கு வந்து வருத்தினாலும், சில காலமாவது உயிர் வாழலாம். பசி என்னும் கொடிநோய் ஒருவனுக்கு வந்து சேர்ந்தால் சிறிது நேரமாவது உயிர் வாழமுடியுமா? பசி நோய் வந்த காலத்து எவ்வளவு சிரமம் உண்டாகிறது? கண் பஞ்சடைகிறது; காதடைக்கிறது; தலை சுற்றுகிறது; வயிறு ஒட்டிப்போகிறது; கால்கள் தடுமாறுகின்றன; அகக் கருவிகளுள் மனஞ் சோர்வையடைகின்றது; புத்தி தடுமாறுகிறது; உயிர் துடிக்கிறது. கருவி காரணங்ளெல்லாம் தத்தஞ் செயல்களினின்றுந் தவிக்கின்றனவல்லவா? அத்தகைய கொடிய பசியை ஆற்றுவதைக் காட்டிலும் சிறந்த தருமம் மூன்று உலகத்திலும் கிடையாதென்பது உறுதி. பசியென்னும் நோயை அன்னம் என்கிற மருந்தைக்கொடுத்து நீக்க வேண்டும். பசியால் களைத்து வந்தவனுக்குச் சிறிது அன்னங்கொடுக்க, அதை அருந்தியவுடனே அவன் முகம்

எவ்வளவு பொலிவடைகிறது?. மனம் எவ்வளவு ஆனந்தத்தையடைகிறது? ஆன்மா எவ்வளவு சாந்தியடைகிறது? சிந்தியுங்கள்!, அப்போது அன்னம் கொடுத்தவனுக்கு எவ்வளவு புண்ணியம் உண்டாகிறது? பசியாற்றுவதைக் காட்டிலும் சிறந்த தவம் வேறு இல்லை.

பசி இன்னும் என்னென்ன விபரீதங்களை உண்டுபண்ணுகிறது?. அரிதிற் பெற்ற பிள்ளையை விற்கச்செய்கிறது;. தவமிருந்து பெற்ற பிள்ளையைத் தூக்கிக்கல்லின் மேலறையச் செய்கிறது;. எல்லாம் கடந்த ஞானிகளாக காட்டிலிருந்து கருத்தைக் யொடுக்கிக் கனலிடை நின்று கடுந்தவமியற்றும் முனிவர்களையும், காயோ கனியோ கந்த மூலங்களோ இலையோ சருகோ கிடைக்குமா என்று தேடி உண்ணச் செய்கிறது;. முற்றுந் துறந்தவரையும் வீடுதேடி பிச்சை வாங்கச் செய்கிறது;. விரதமுங் கிடையாது; பலமுங்கிடையாது என்று விரத நாளினுங் கூட மூன்று வேளை தலையணைக்குப் பஞ்சடைக்கிற மாதிரி வயிற்றில் சோற்றைத் திணிக்கச் செய்கிறது. விரத மிருக்கிறவர்களை பல ஆகாரங்களாகப் பழமாகப் பாலாக வயிறுபுடைக்க உண்ணச்செய்கிறது. சிவபெருமானால் உபதேசிக்கப்பெற்ற பட்டினத்தடிகளும் பசியால் வாடி ஒருவன் வீட்டிற்கு உணவை நாடிச் செல்ல நேர்ந்தது.

அருணகிரி சுவாமிகளும் "நீள் பசியவிக்கக் கனபானம் வேணும்" என்றனர். வேறொரு வழியின்றி பசி தாகத்தால் மெலிந்தவர்களை அன்போடும் அருளோடும் அன்னமீந்து ஆதரிக்க வேண்டும். நிலத்தில் ஒரு விதை விதைத்தால் அது ஒன்றுக்கு ஆயிரமாக விளைகிறதல்லவா? அது போல் ஏழைகள் வயிற்றில் கொடுத்த அன்னம், மறுமைக்கு ஆயிர மடங்காகப் பெருகி நமக்கு நன்மையை நல்குகிறது. சென்ற வருடத்தில் விளைவித்த தானியத்தையல்லவா இப்போது உண்ணுகிறோம். அதுபோல முன் ஜென்மத்தில் செய்த நன்மையினால் நாம் இப்போது, சுகத்தை அனுபவிக்கிறோம். இப்போதும் நன்றாகப் பயிரிட்டு விளைவித்தால் அல்லவா அடுத்த வருடத்தில் கவலையற்றிருக்கலாம். இப்போது நாம் நன்மையைச் செய்தாலல்லவா மறு பிறவியில் சுகம் பெறலாம். நாம் எவ்வளவோ பாடுபட்டு செல்வத்தைத்தேடுகிறோம். அங்ஙனம் உடல் வருந்தி சேகரித்தபொருளை இவ்விடத்திலேயே வைத்துவிட்டுப் போகலாமா? அந்தச் செல்வத்தை நல்ல சேமநிதி நிலையத்தில் (பண்டாபீஸ்) போட்டு வைத்தால் நாம் போகும் இடத்திற்கு அது உதவுமல்லவா? இப்போது நாம் தேடிய பொருளை சேமித்து வைக்க வேண்டிய இடம் யாது? எங்கு வைத்தால் ஒன்றுக்கு ஆயிரமாக வரும்? என்று ஆராய்ந்து பார்த்தால் அடியார்கள், ஏழைகள் வயிற்றில் பணமாகப் போட முடியுமா? முடியாது. பின்னர் என்ன செய்யவேண்டும்? அன்னமாக மாற்றிப் போடவேண்டும். அப்படிப் போட்டு வைத்தால் அது பிறவிகள் தோறும் தொடர்ந்து கொண்டே வரும். இப்போது ஒருவன் சுகமாக இருக்கிறான். அவனைக் கண்டு நாம் சொல்லுகிறோம். "கொடுத்து வைத்தவன்" என்கிறோமல்லவா? எங்கு கொடுத்து வைத்தான்? அடியார்களுக்கும் ஏழைகளுக்கும் கொடுத்து அவர்கள் வயிற்றில் வைத்தான்; அது இப்போது வந்து சேருகிறது. எந்தவேலையும் செய்யாமல் சுக ஜீவியாயிருக்கிறான். பல வேலை செய்தும் கால் வயிற்றுக் கஞ்சி கூடக் கிடைக்காமல் சிலர் துன்புறுகிறார்கள், என்ன காரணம்? முன் பிறவியில் அறஞ்செய்யாதவர்களல்லவா? இவைகளை எல்லாம் நோக்கியே தெய்வப்புலவர்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

என்று திருவாய் மலர்ந்தருளினார். ஆன்ம திருப்தியை யுண்டு பண்ணுவது அன்னதானம் ஒன்றே ஆகும்.



## திருநாமம்

நாமம் ஒருவகைத் திருமண்ணால் இடப்படுவது. எல்லாம் முடிவில் மண்ணாய்விடும் என்பதை இது உணர்த்துகின்றது. அன்றியும் இறைவனது திருவடியல்லாது உயிர்களுக்கு வேறு கதியில்லை என்பதை உணர்த்த திருமாலின் திருவடியின் சாயலாய் திருமாலடியார்கள் இதனை இடுகின்றார்கள்.

# அருள்மிகு திரிபுரசுந்தரி உடனுறை வேதகிரீஸ்வரர் திருக்கோயில்,

திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம் மாவட்டம்


19.8.2004 மற்றும் 20.8.2004 தினங்களில் நடைபெற்ற சங்குதீர்த்த புஷ்கர மேளா மற்றும் இலட்சதீபப் பெருவிழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைத்து அரசு துறை அதிகாரிகள் மற்றும் பல இலட்சம் பக்த பெருமக்கள் ஆகிய அனைவருக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியை சமர்ப்பிக்கிறோம்.

இப்படிக்கு

**வ.ச. மறைமலை,** M.A.,B.Ed.,
செயலாளர் / பொருளாளர் /
செயல் அலுவலர்

**திரு. செ.து. வரதராஜன்,** Ex.M.L.A.
தலைவர்
இலட்சதீப பெருவிழாக் குழு

மற்றும்
துணைத் தலைவர், உறுப்பினர்கள்
இலட்சதீப பெருவிழாக்குழு
அருள்மிகு திரிபுரசுந்தரி உடனுறை வேதகிரீஸ்வரர் திருக்கோயில் ,




# மகாபாரதம்

**5**

முனைவர் **த.அமிர்தலிங்கம்**

“பாண்டவர்கள் தாமாக அவர்கள் இழந்த நாட்டைக் கேட்கவில்லை. கேட்குமாறு தூண்டி விடுபவன் இடையன் ஆகிய கண்ணன்; அவன் அத்தினாபுரிக்குத் துணிவாக வந்திருக்கிறான்; தனியாக வந்திருக்கிறான். இந்த நேரத்தில் நாம் என்ன செய்யலாம். சொல்லுங்கள்” என்று துரியோதனன் கேட்கிறான்.

அவன் வினாவிற்கு விடையை முதலில் அளிப்பவர் அவனுடைய தந்தை திருதராட்டிரர். “கண்ணன் தனியாக வந்தனன், என்ன செய்யலாம்” என்று கேள்வியின் அர்த்தம் விளங்காதபடி தான் வினவுகிறான் துரியோதனன். ஆனால் பாம்பறியும் பாம்பின் கால் அல்லவா? அதிலும் பாம்பைக் கொடியாகவே கொண்டு விளங்குகின்ற திருதராட்டிரனுக்குத் தன் மகன் கேட்ட கேள்வியின் பொருள் விளங்காமல் போகுமா? விளங்கி விட்டது.



கண்ணனைக் கொல்லுவதற்கே தன் மகன் ஆலோசனை கேட்கிறான் என்பதைத் தெரிந்து கொண்ட திருதராட்டிரன் தன் மகன் எண்ணத்தைத் தவறு எனக் கண்டித்துக் கூறியிருக்கலாம். பாண்டவர்களுக்கு உரிமை உடைய நாட்டைச் சமாதான முறையிலே வழங்கிவிடத் தன் மகனுக்கு ஆணையிட்டிருக்கலாம் அல்லது அறிவுரையாவது கூறியிருக்கலாம். தான் நல்லதைச் சொன்னால் அதை மந்திரமாகக் கொண்டு தன் மகன் செயல்படமாட்டான் என்பதனாலோ அல்லது தன் மகன் நினைத்ததுதான் தனக்கும் ஏற்றது என்பதனாலோ தெரியவில்லை, திருதராட்டிரன் தன் மகன் கேட்ட கேள்விக்கு,

“இரும்புலி வலையிற் பட்டால் விடுவரோ எயினர் ஆனோர்
வரம்பில் வெஞ்சேனை யோடும் வளைத்தினி மாயன் தன்னைக்
கரும்பொழுதகலு முன்னே கொல்வதே கருமம்”

(கிருட்டிணன் தூது 171)

என்று பதிலுரைக்கின்றான்.

“வலிமை வாய்ந்த புலி வலிய வந்தது. வலையில் மாட்டியும் கொண்டுவிட்டது. வேடர்கள் என்ன செய்வார்களோ அதைத்தான் நாமும் செய்யவேண்டும். எண்ணிலாப் படைகளோடு போய் மாயனை வளைத்துக் கொண்டு, கரிய இரவுப் பொழுது அகலும்



கம்யூனிசம் மனிதனுக்கு மட்டும் பொருளைப் பங்கு போடச் சொல்கிறது.
திருவள்ளுவரும், வள்ளலாரும் அப்படிச் சொல்லவில்லை;
எல்லா உயிர்களையும் காப்பாற்றச் சொல்கிறார்கள்.

முன்பாகவே கரியவனைக் கொன்று விட வேண்டும்" என்று திருதராட்டிரன் - வயதில் மூத்தவன் - அன்பையும் அறத்தையும் போதிக்க வேண்டியவன் இப்படி ஒரு கருத்தைத் தெரிவித்ததைக் கேட்டு துரியோதனன் மகிழ்கிறான். சகுனியும் மகிழ்கிறான். துரியோதனனின் உடன் பிறந்த தொண்ணூற்றெட்டு சகோதரர்கள் மகிழ்கின்றனர். ஏன் கர்ணனும் கூட கேட்டு மகிழ்கிறான். ஆனால் விகர்ணன் என்ற துரியோதனனின் சகோதரன் ஒருவன் மட்டும் அதை வெறுக்கிறான். வெறுத்ததோடு அதை மறுத்தும் தன் கருத்தைத் துணிவாக எடுத்துரைக்கிறான். தந்தை திருதராட்டிரன் "கண்ணனைக்காரிருள் விலகுவதற்குள்ளாகவே கொன்று மாய்க்க வேண்டும்" என்று கூறியவுடனே அதைக் கேட்டுக் கலகலவெனச் சிரிக்கின்ற விகர்ணன் "தூதுவராய் வந்த ஒருவரை யார் இதற்கு முன்பு கொன்று இருக்கிறார்கள்? அறிவும் அறமும் இல்லாத இத்தகைய ஆலோசனையை எங்கேயிருந்து கற்றுக் கொண்டீர்கள்?" என்று கேட்டு தன் கோபத்தைக் காட்டுகிறான்.

மேலும் விகர்ணன், "முதியவர்கள், சிறுவர்கள், வேதம் வல்லமுனிவர்கள், நோயாளிகள், பெண்கள், தூதர்கள், அர்ச்சகர்கள் ஆகியவர்களைக் கொல்வது கொடிய பாவம் ஆகும். அத்தகைய பாவம் செய்த பாதகர்கள் நரகமே அடைவார்கள். பகைவர்களேயானாலும், நாடு தேடி வந்தவர்களைக் கொல்லலாகுமா? அப்படிக் கொல்வது ஆண்மையும் ஆகுமா? என்று வினவி இறுதியாக, "அத்தகைய தகாத கருத்தைக் கைவிடுவதே தருமம். அதை மீறி கண்ணனைக் கொல்ல முயல்வீர்களேயானால் நான் சொல்வேன், கடலளவு சேனையைத் திரட்டிக் கொண்டு போவீர்களேயானால் கூட கார்மேக வண்ணன் எவருக்குமே அகப்பட மாட்டான்" என்று துணிவாகத் தன் கருத்தை எடுத்துக் கூறி துரியோதனனின் சதித்திட்டத்தை முறியடிக்க முயற்சி செய்கிறான்.

ஆனால் விகர்ணனுடைய முயற்சி அங்கே தோற்று விடுகிறது. அவனுடைய நியாயமான கருத்தை ஆதரிக்க அங்கே ஒருவர்கூட இல்லை. துரோபதையின் துகிலுரித்த வீரனாகிய துச்சாதனன் உடனே விகர்ணன் மேல் சீறி விழுந்து, "பொடியர்களை எல்லாம் ஏன் இந்தப் பெரியோர்கள் கூடுகின்ற அவையில் அனுமதிக்கிறீர்கள்?" என்று கூறி விகர்ணனின் அறிவுரையை அலட்சியப்படுத்தி விடுகிறான். "இந்த இரவு நேரத்திலேயே இப்பொழுது போய் விதுரன் மாளிகைக்குத் தீயை மூட்டி, கண்ணனோடு, வில்லொடித்துப் போட்ட விதுரனையும் பொசுக்கி விடுவோம். அனைவரும் புறப்படுங்கள்" என்று ஆலோசனை கூறுகிறான் அவன்.

மறைந்து நின்று தீமூட்டும் இந்தச் சதியாலோசனை ஏனோ கர்ணனுக்குப் பிடிக்கவில்லை. "நெருப்பெரிய வைத்துத்தான் கண்ணனைக் கொல்ல வேண்டுமா? ஏன் நானில்லையா? என்னுடைய வில் இல்லையா? ஒரே ஒரு அம்பினாலே நேருக்கு நேர் நின்றே கண்ணனைக் கொன்று காட்டுகிறேன். வாருங்கள் போகலாம்" என்பதாகத் தன்னுடைய வீரத்தைப் புகழ்ந்துரைத்து துச்சாதனனின் எரிமூட்டும் ஆலோசனையை மறுத்து உரைக்கிறான் கர்ணன்.

## இரண்டு

| | | |
|---|---|---|
| வருவது போவது | - | செல்வம், தரித்திரம் |
| வந்தால் போகாதது | - | கீர்த்தி, அபகீர்த்தி |
| போனால் வராதது | - | மானம், உயிர் |
| தன்னுடனே வருவது | - | பாவம், புண்ணியம் |

## எந்தெந்த காலங்களில் திருநீறு முதன்மையாகத் தரிக்க வேண்டும்?

சூரியன் உதிக்கும் போதும், அத்தமிக்கும் போதும், பல் விளக்கிய உடனும், குளித்த உடனும், உண்ணப்போகும் போதும், உண்ட பின்னும், தூங்கபோகும் போதும், தூங்கி எழுந்த உடனும், கெட்ட கனாகண்ட உடனேயும், மலசலம், குளித்து விட்டுக் கைகால் தூய்மை செய்த உடனும், முதன்மையாகத் தரித்தல் வேண்டும்.

ஆனால் அந்த கர்ணனின் ஆலோசனை துரியோதனனுக்குப் பொருத்தமான ஆலோசனையாகப்படவில்லை. துரியோதனனுக்குப் பொருந்தக்கூடிய ஆலோசனையை அவ்வப்போது அறிவிக்கின்ற திறமையும், பெருமையும் சகுனிக்கல்லவா இருக்கிறது! சகுனி தன் ஆலோசனையைத் தெரிவிக்கின்றான்.

“நம்முடைய அத்தினாபுரியிலிருந்து பத்திரமாக கண்ணன், பாண்டவர் இருக்கும் இடம் போய்ச் சேருவானேயானால், நிச்சயம் நம்மைப் போரிலே வெற்றி அடைய விடமாட்டான். அவனை வஞ்சித்துத்தான் நாம் வெற்றி கொண்டாட வேண்டும். பெரும் பள்ளம் ஒன்றைத் தோண்டுவோம். இராக்கதர்களையும் மல்லர்களையும் மறைவாக பள்ளத்தில் இருக்க வைப்போம். மேலே ஓர் பொய்யான ஆசனத்தை அமைப்போம். காலையில் கண்ணனை வரவழைத்து ஆசனத்தில் அமருமாறு கூறினால் அமருவான்; குழியிலே வீழ்வான். உடனே விலங்கைப் போட்டுக் கொடிய சிறையிலே வைத்து விடுவோம். தூதர்களைக் கொல்லுவது வேண்டுமானால், அறம் அற்றதாக இருக்கலாம். ஆனால் தூதரைச் சிறை வைப்பது அறமானதுதான்” என்கின்ற பொருள்பட சகுனி,

**‘கொல்லுவ தியற்கை யன்று குழிபறித் தரக்கரோடு**
**மல்லரை யிருத்தி மேலோர் ஆசனம் வகுத்து நாளை**
**எல்லிடை யழைத்து வீழ்த்தி இகலுடன் விலங்கு பூட்டித்**
**தொல்லருஞ் சிறையில் வைத்தல் தூதருக் குரிமை”**

(கிருட்டிணன் தூது 179)

எனஎடுத்துரைக்க, அந்த ஆலோசனையையே பொருத்த மானதென ஏற்று துரியோதனன் உடனே படுகுழி அமைக்கும் முயற்சியிலே ஈடுபடத் தொடங்குகிறான்.

தொடரும்...

○○○

### புண்ணியங்கள்

கடவுள் வழிபாடு, பெற்றோர்ப் போற்றல், சுற்றந்தழுவுதல், பெரியோர் சொற்படி நிற்றல், பிற உயிர்களுக்கு இரங்குதல், வாய்மை முதலிய அறநெறிகளைக் கடைப்பிடித்தல்

## கண்ணதாசனின் கண்ணன்




கண்ணனைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது கவியரசு கண்ணதாசனைக் குறிப்பிடாது இருக்க முடியுமா?

கண்ணதாசன் எழுதிய “ஸ்ரீ கிருஷ்ண அந்தாதி” என்ற நூலை அறிந்தவர் சிலரே! அர்த்தமுள்ள இந்து மதத்தை எளிய நடையில் தெரிவித்தவர். அண்மைக் காலத்துக் கவிஞர் அவர். நிலையில்லா வாழ்வில் நிம்மதியை நாடுவதற்குக் கண்ணன் வழிபாட்டைக் கைக் கொள்ளுமாறு அவர் எழுதிய கவிதைப் பகுதி இதோ!.

தீருவதே செல்வம்; அதில்
சிந்துவதே பாபம்; அதைத்
தினமும் தேட
சேருவதே கோபம்; அதில்
செய்வதெலாம் கொலைகளென
திறம் இழந்து
ஊருவதும் பறப்பதுமாய்
ஓடுகிறாய்; ஆடுகிறாய்;
உள்ளம் என்று
தேருவதோ, ஆறுவதோ
தீவாய்தான் ஆற்றுவதோ
சிந்தை செய்க!
செய்க ஒரு பொம்மை; அதில்
செதுக்கு ஒரு கைக்குழலை;
சேலை வெட்டி
நெய்கஒரு சிற்றாடை;
நிறைகஒரு பொன்மலை;
நிமிர்த்தி வைத்து
மெய்கமழ மணம்கமழ
விளக்கேற்றி சூடங்கள்
விளங்க ஏற்றி
கைகமழ வணங்குவதால்
காடுகமழ உன்வாழ்வு
கனிவு றாதோ!

# அருள்மிகு யோக ஆஞ்சநேய சுவாமி அருள்பெறப் பிரார்த்திக்கிறேன்




**என். சீனிவாசன்,** பி.எஸ்.ஸி
சிறியமலை பிரசாதக் கடை
குத்தகைத்தாரர்
கொண்டபாளையம், சோளிங்கர்,
வேலூர் மாவட்டம்
தொலைபேசி : 954172-262894
செல் : 98433 50995

# மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேக சிறப்பு அம்சங்கள்

1. முன்பு எப்போதும் இல்லாத அளவில் ரூ.100 இலட்சத்திற்கு மேலான மதிப்பீட்டில் உபயதாரர்கள் மூலம் சீருடன் பொது மக்களின் எதிர்பார்ப்புக்கு ஒப்ப திருப்பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளது.

2. கோபுரங்கள் மற்றும் விமானங்கள் பழுது நீக்கப்பட்டு, வண்ணம் தீட்டப்பட்டு, கருங்கல் தூண்கள் மற்றும் சுவர்கள் தூய்மை செய்யப்பட்டு எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது.

3. சுவாமி, அம்பாள், சிங்காரவேலன், விநாயகர் மற்றும் அனைத்து சன்னதிகளும் பாலாலயம் செய்யப்பட்டு, கருவறைகள் அனைத்தும் தூய்மை செய்யப்பட்டு பழுதடைந்த கருங்கற்கள் அகற்றப்பட்டு புதிய கற்கள் பதிக்கப்பட்டுள்ளது.

4. அருள்மிகு கபாலீஸ்வரர் கருவறையில் சிவலிங்கத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த பழுதுபட்ட மெல்லிய சுவர்ணபந்தனத்தை அகற்றி புதிதாக 1500 கிராம் எடையளவில் புதிய சுவர்ணபந்தனம் சாற்றி எழிலூட்டப் பட்டுள்ளது.

5. ஆங்காங்கே அமைந்திருந்த இரும்புத் தடுப்புகள் அகற்றப்பட்டு பித்தளைத் தடுப்புகள் அழகுடன் அமைக்கப் பட்டுள்ளது.

6. அருள்மிகு சிங்கார வேலன் சன்னதியின் முன்பாக அமைந்திருந்த பழுதுபட்ட கொடிமரம் அகற்றப்பட்டு புதிய கொடிமரம் தாமிரத்தகட்டில் தங்கமுலாம் பூசப்பட்டகவசத்துடன் நிறுவப் பட்டுள்ளது.

7. கோபுரம் மற்றும் விமான கலசங்களுக்கு தங் கமுலாம் பூசப்பட்டு பொலிவூட்டப் பட்டுள்ளது.

8. சுவாமி சன்னதியின் முன்பாக உள்ள தங்கக் கொடிமரம் தூய்மைப்படுத்தப் பட்டுள்ளது.

9. பக்தர்களின் வசதிகருதி, சுவாமி மற்றும் அம்பாள் சன்னதிகளில் புதிதாக குளிர் சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.

10. திருக்கோயிலை திருப்பணி செய்ததோடு திருக்கோயிலின் அங்கமான புனித திருக்குளத்தினையும் செப்பனிட்டு நீர்நிரப்பி பக்தகோடிகளின் பேராவல் பூர்த்தி செய்யப்பட்டது.

11. கும்பாபிஷேகத்தையொட்டி திருக்கோயில் வளாகம் முழுமையும் வண்ணமலர்களால் அலங்கரித்து எழிலுக்கு எழில் சேர்க்கப்பட்டது.

12. பல்லாயிரக்கணக்கான பக்தப் பெரு மக்களோடு, ஆதீனகர்த்தர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்மிகு நீதியரசர்கள், தொழிலதிபர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொள்ள 30.08.2004 அன்று காலை 6.20 மணியளவில் அனைத்து விமான மற்றும் கோபுர கலசங்களுக்குவேதாகம விற்பன்னர்களால் புனித நீர் அபிஷேகம் செய்து மகா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறியது.

## விநாயகப் பெருமானுக்கு சிறப்புப் பெயர்கள் 16.



1. சுமுகன்
2. ஏகந்தன்
3. கபிலன்
4. கஜகர்ணகாயன்
5. லம்லோதரன்
6. விகடன்
7. விக்கினராஜன்
8. விநாயகன்
9. தூமகேது
10. பாலசந்திரன்
11. வக்கிர துண்டன்
12. ஸ்கந்த பூர்வஜாயர்
13. கணாத்யஷன்
14. ஏரம்பர்
15. சூர்ப்பகர்ணார்,
16. கஜானன் ஆகியவையாகும்.



ஏணி வைத்து ஏறி மேலே போகவேண்டுமே தவிர, ஏணியே சுகமென இருந்துவிடாதே. அதுபோல், குடும்பத்திலிருந்து ஞானத்தை நோக்கி மேலே ஏறிச் செல். குடும்பமே சுகமென நம்பிப் பாசத்தில் அழுந்திவிடாதே.

# மயிலை கபாலீசுவரர் வரப்பிரசாதி

ஒரு அன்பர் தன்னுடைய நண்பருக்குத் தன் ஊர் கோயிலைப்பற்றிச் சொல்லும் போது என்ன சொல்வார்? என்ன சொன்னால் அந்தக் கோவிலின் புகழ் எடுப்படும். அந்தக் கோவிலைப் புகழ மிகச்சரியான வாக்கியம் எது.

எங்கள் கோவிலின் மூலவர் வரப்பிரசாதி. உன் மகளுக்குத் திருமணம் நடக்க வேண்டுமா? இங்கு வந்து அவரை வேண்டிக்கொள்; உன் மனைவியின் நோய் தீர வேண்டுமா? வந்து கைகூப்பு; உனக்கு வீடு நிலபுலன்கள் வாங்க வேண்டுமா? இதோ இவர் இருக்கிறார்; நெடுஞ்சாண்கிடையாக விழுந்து இவரிடம் சரணம் அடைந்து விடு; ஏனெனில், எங்கள் கோவில் மூலவர் வரப்பிரசாதி கேட்டதைக் கேட்டவிதத்தில், கேட்டநேரத்தில் கொடுக்கக்கூடிய வல்லமையுள்ள கடவுள் என்று தானே சொல்வார்.

உங்களுக்குக் கபாலீசுவரரையும், கற்பகாம்பாளையும் அறிமுகப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தால் நான் உடனடியாய் எங்கள் மயிலை கபாலீசுவரர் வரப்பிரசாதி என்றுதான் சொல்வேன். கேட்டதைக் கேட்டவிதத்தில் கேட்டவுடனேயே கொடுக்கின்ற தெய்வம் என்றுதான் புகழ்வேன்.

என் தாய் கற்பகாம்பாள் மிகப்பெரிய மனுஷி. மத்திய வயதுப்பெண்மணி குடும்பம் என்ற விளக்கைத் தூண்டிவிட்டு அணையாமல் காக்கும் தெய்வம். பெண்களைத் தன்பால் வெகு எளிதாய் ஈர்க்கும் பேரிளம் பெண்.

ஒரு தெய்வத்தை வரப்பிரசாதி என்று ஒருவர் சொல்ல வேண்டுமென்றால் அவர் வாழ்வில் ஒரு அனுபவ சாட்சியம் இருக்கவேண்டுமல்லவா!

கையில் கொஞ்சம் காசு வைத்துக் கொண்டு வீடு வேண்டும், வீடு வேண்டும் என்று ராயப்பேட்டையிலிருந்து தாம்பரம், சேலையூர் வரை பல இடங்கள் போய் பார்த்தும் எதுவும் என் மனசுக்கு ஒப்பவில்லை.


பாலகுமாரன்

இரண்டு மாமரம், ஒரு வேப்பமரம், ஒரு பாரிஜாதம் என்று சூழ்ந்திருக்கிற ஒரு இருபது வருட பழைய வீட்டைத் தாம்பரத்தில் பார்த்து முன் பணம் கொடுத்து விடுவோமா என்று தவித்துக் கொண்டிருந்தபோது 'இந்த மயிலாப்பூரை விட்டு எப்படிப் போவது?' என்கிற எண்ணம் எழுந்தது.

மயிலாப்பூரா? சேலையூரா? என்று மனம் தத்தளித்தது. நெரிசலாக இருந்தாலும். தெருக்கள் குறுகலாக இருந்தாலும் மயிலாப்பூரே எனக்கு வேண்டுமென்று என் மனம் முடிவு செய்தது. தினந்தோறும் கபாலீசுவரரையும், கற்பகாம்பாளையும் பார்க்கின்ற பெரும்பாக்கியத்தை இழக்க வேண்டாமென்று என்னை என்மனம் எச்சரித்தது.

ஆனால், நகரத்திற்குள் நல்லவீடு கிடைப்பது மிக அரிதாக இருந்தது. நல்ல வீடாய் இருந்தால் விலை அதிகம். விலைகுறைவைப் பார்த்தால் வீடு மனசுக்குப் பிடிக்கவில்லை. ஏன் வீடு அமையவில்லை? ஒருவேளை மயிலையில் வாழும் பெரும்பேறு எங்களுக்கில்லையோ என மனம் மருகினேன். வீடு சம்பந்தமாய் ஒரு நண்பரோடு பேசிவிட்டு இரவு பதினோரு மணி வாக்கில் கபாலீசுவரர் கோவிலைத் தாண்டும் போது சட்டென்று ஸ்கூட்டரை விட்டுக் கீழிறங்கி நடுத்தெருவில் பிள்ளையார் சன்னதிக்கு நேர் எதிரே பெரிய கோபுர வாசலில் நானும் என் மனைவியும் விழுந்து வணங்கினோம்.

கபாலீசுவரா! அருளுடை நாயகா! அன்புத் தமையனே எங்களுக்கு உன்னுடைய ஊர் எல்லையிலேயே ஒரு வீடு கொடுக்கலாகாதா? நாங்கள் எதற்குச் சேலையூரும் இன்னும் பிற இடத்திற்கும் போக வேண்டும்? என்று கண்ணில் நீர் தளும்ப வேண்டிக் கொண்டோம்.

கபாலீசுவரர் என்பவர் எனக்குள் எப்போதுமே ஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஆஜானுபாகுவான உருவமுள்ளவராகத்தான் நினைக்க வரும். தாய் என்பதைவிட மன்னி என்பதாகத்தான் கற்பகாம்பாளை என் மனசு நேசிக்கும். அப்படி வேண்டிக் கொண்ட இருபத்தியோராம் நாள் ஒரு வீடு மனதிற்குப் பிடித்து முன் பணம் கொடுத்து மீதி காசுக்கும் விரைவாய் ஏற்பாடாகி, ஒரே மாதத்தில் ஒரு அமைதியான அடுக்குமாடிக் கட்டிடத்தின் ஒரு பகுதி எங்களுக்குச் சொந்தமாகிவிட்டது.

நான் வேண்டியதில் ஒரு சிறிய பிசகு இருந்தது. உன் **எல்லைக்குள்** என்று நான் வேண்டிக் கொண்டிருக்க வேண்டும். உனது **எல்லையில்** என்று நான் வேண்டிக் கொண்டு விட்டேன்.

கபாலீசுவரர் வரப்பிரசாதி. சொன்ன சொல் மீறாதவர். நான் வேண்டிக் கொண்டதுபோலவே மயிலையின் **எல்லையில்** எனக்கு வீடு அமைந்தது. என் தெரு மயிலை. என் பின்தெரு அபிராமபுரம்.

கபாலீசுவரரும், கற்பகாம்பாளும் வரப்பிரசாதி என்பதற்கு இதைவிடவும் வேறு என்ன சாட்சியம் சொல்ல முடியும்?

இறந்து எரியுண்டு எலும்பாய் போனபூம்பாவை மறுபடியும் உருவாய் வந்த அற்புதம் நிகழ்ந்த ஊர் மயிலாப்பூர். அற்புதமான சிற்பங்கள் ஏதும் கோவிலில் இல்லை. ஆனாலும் கோவிலில் ஏதோ ஒரு அழகு கொஞ்சும்.

கபாலீசுவரர் கோவில் மிகப் பிரமாண்டான கற்றளி இல்லை. ஆயினும் திரும்பத் திரும்ப வரத்தூண்டுகின்ற மதில்களையுடைய திருமயிலைக்கோயில் நானூறு வருடங்களுக்கு முன்பு அன்னியரின் ஆக்கிரமிப்பால் சேதப்படுத்தப்பட்டு பிறகு உள்ளே புதிய கோயிலாய்க் கட்டப்பட்டது. இந்தக் கோயிலுக்குக் குளம் வெட்டப்பட்டது தனிக்கதை முழு நாவல். மிகச்சுவையான சூத்திரம். நான்கு மாடவீதிகளும், அறுபத்துமூவர் விழாவும், தேரோட்டமும் குறைவின்றி நடக்கின்ற பண்டிகை கோலாகலங்களுக்கப்பால் கபாலீசுவரர் கோவில் மயிலாப்பூர் வாழ் மக்களால் மிகச் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது கற்பகாம்பாள் அணிந்திருக்கும் பல நகைகள் மயிலாப்பூர் வாழ் பக்தர்கள் கொடுத்தவை.

திமிருகின்ற பக்தர் கூட்டமும், மூன்று வகையான வேதகோஷமும், சிவன் நாமாவளியும், தேவார திருவாசகப்பாடல்களும் என்று பிரதோஷக் காலம் அமர்க்களப்படும்.

எந்த அழைப்பும் இன்றி, எந்த அமைப்பும் இன்றி பிரதோஷக்காலத்தில் மக்கள் தாங்களாகவே கூடுவதும், கபாலீசுவரரைத் தோளில் தூக்கிச் சுமப்பதும் மிகமிக அழகான உயர்வான விஷயம்.

கபாலீசுவரர் கோவிலின் அதிகார நந்தி ஞாபகத்திற்கு வருகிறது. கம்பீரமும் கனிவும் கொண்ட அந்த மிகப்பெரிய சிலை சமீபத்தில் வடிக்கப்பட்டது. அதிகார நந்தியை அந்த அழகுக்காகவே காண்பதற்கு வெகுதூரத்திலிருந்து மக்கள் வருவது வழக்கம்.

நான்கு மாடவீதிகளும், மிக அழகான குளமும், உயர்ந்த கோபுரமும், அமைப்பான விமானமும் விசாலமான சுற்றுப்பிரகாரமும் கொண்ட மயிலாப்பூருக்கு ஒருமுறை வந்தால் பலமுறை வரத்தோன்றும். மயிலாப்பூரில் குடிபுகுந்துவிட்டால் விட்டுப்பிரிய ஒருநாளும் மனமிராது. வேறு எந்த ஊருக்கும் குடிபெயரத் தோன்றாது.

மயிலாப்பூர், கோவிலால் சிறந்த ஊர் அல்ல. ஊர் முழுவதும் கோவில்! கபாலீஸ்வரர் கற்பகாம்பாளின் அனுக்ரகம் அந்த பூமி முழுவதும் பரவிப்படர்ந்திருக்கிறது என்பது என் சொந்த அபிப்ராயம்.

⌘⌘⌘

## நவக்கிரக - நிவேதனம்

| | | |
|---|---|---|
| சூரியன் | - | கோதுமை, ரவை, சர்க்கரைப் பொங்கல் |
| சந்திரன் | - | பச்சரிசிப் பால் பாயாசம் |
| செவ்வாய் | - | பொங்கல் (துவரை சேர்த்த வடைசாதம்) |
| புதன் | - | புளியோதரை அல்லது பச்சைப்பயறு சுண்டல் |
| குரு | - | தயிர்சாதம், கடலைச் சுண்டல் |
| சுக்ரன் | - | நெய்ப்பொங்கல், மொச்சைச் சுண்டல் |
| சனி | - | எள்ளுச் சாதம் |
| ராகு | - | உளுந்துச் சாதம் |
| கேது | - | சித்ரான்னம் (கொள்ளு சேர்த்த நிவேதனம்) |



***நிதி இருந்தால் நீதி இருக்க வேண்டும்.***
***மனம் இருந்தால் மானம் இருக்க வேண்டும்.***
***தனம் இருந்தால் தானம் இருக்க வேண்டும்.***

# இராஜமன்னார்குடி
# அருள்மிகு இராஜகோபாலசுவாமி உற்சவர்
## அழகுத் திருக்கோலம்

திருவாரூர் மாவட்டத்தில் மறையோர் மிகுந்த மன்னார்குடி என்னும் கோயில் பாதி குளம் பாதி மன்னார்குடி மதில் அழகு என்றும் புகழ்பெற்ற முதுமொழிகள் கொண்ட இராஜமன்னார்குடி, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெருமை கொண்டது.

முதலாம் குலோத்துங்க சோழன்




(கி.பி.1072-1122) கருவறை, அர்த்தமண்டபம், மூன்றாம் கோபரம் ஆகியவற்றை கட்டினான். நாயக்கர் காலத்தில் இரகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர் ஆகியோரும் பெரும் திருப்பணிகளையும், விலைமதிப்புள்ள நவரத்தின கவசம், வைர முடி ஆகியவற்றையும் அளித்து, தமது பக்தியைக் காட்டியுள்ளனர்.

திருக்குடந்தை தென்கிழக்கில் சம்பகவனம் உள்ளது. இவ்வனத்தில் 1008 முனிவர்கள் தவமியற்றினர். அவர்களுள் -வஹ்னிமுகர் என்பவர் சிறப்புடையவர். இவருக்கு கோப்பிரளயர், கோபிலர் என்னும் இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்கள் இருவரும் சிறந்த தபோதனர்களாகவும், பக்தி மிக்கவர்களாகவும் திகழ்ந்தனர்.

எட்டெழுத்தோதி ஒற்றைக்காலில் நின்று இவர்கள் நாராயணனைக் குறித்து தவமியற்றினர். பெருமாள் இவர்கள் தவத்துக்கு உகந்து என்ன வரம் வேண்டும் என்று கேட்டருள, எங்களுக்கு மோட்சம் வேண்டும் என்றனர். அப்படியாயின் துவாரகையிலுள்ள கண்ணபிரானைத் தரிசித்தால் அப்போது கிட்டும் என்றார் பரமாத்மா. இருவரும் மகிழ்ந்து துவாரகையை நோக்கி புறப்பட்டனர். நடுவழியில் பல புண்ணிய புனல்களில் நீராடித் தலங்களைத் தரிசித்துக்கொண்டே சென்றனர்.

நடுவே நாரத முனிவரைக்கண்டு வணங்கி, கண்ணபிரான் எங்குள்ளார்? துவாரகை எங்குள்ளது? என வினவினார். இவ்வுலகில் பூபாரம் தீர்க்க வந்த கண்ணபிரான் கம்ஸன் முதலான தீயவர்களை மாய்த்து பீஷ்மன் முதலான நல்லோரைக் காத்துத் தம் விண்ணுலகம் சென்று விட்டார் என நாரதர் கூறக்கேட்டு, இருவரும் ஏக்கமுற்று அக்கணமே மூர்ச்சித்து விழுந்துவிட்டனர். நாரதர் அவர்களது பக்தியைக் கண்டு மகிழ்ந்தார். பின் பன்னி ரெண்டெழுத்து மந்திரத்தை அவர்களுக்கு உபதேசித்து நீங்கள் துவாரகை, நந்த கோகுலம் ஆகியவற்றைக் கண்டு தரிசித்துப் பின் சோழ வள நாட்டிலே குடந்தைக்கு தென்பால் அமைந்த சண்பகாரண்யம் என்னும் தலத்திற்குச் செல்லுங்கள். அங்கு ஹரித்திராநதிக்கரைக்குச் சென்று நீராடி அங்கே ஓராண்டுகாலம் தவம் இயற்றினால் பகவான் உங்களுக்கு காட்சித்தருவார் என்று கூறியருளினார்.

இருவரும் மகிழ்ந்து துவாரகை, நந்தகோகுலம் முதலிய தலங்களை வழிபட்டு பின் ஹரித்திராநதியை அடைந்து ஆசிரமம் அமைத்து தவமியற்றினர். தவத்தைக்கண்டு பரமன் காட்சி அளித்தார். பரந்தாமனைக் கண்டு பலவாறாகத் துதித்த இரு முனிவர்களும் பெருமாளே! தேவரீர் அன்று பிருந்தாவனத்தில் செய்த லீலைகளை இன்று நாங்கள் கண்டு உய்ய அருள வேண்டும் என வேண்டினர். அவர்கள் விழைந்த வண்ணமே பரந்தாமன் கண்ணனாக அவதாரம் செய்து காட்டிய லீலைகளை அவர்களுக்கு காட்சி அருளினார். கண்ணனது 30 கோலங்களை



அருள்மிகு செங்கமலத்தாயார் அழகுத் திருக்கோலம்

இரு முனிவர்களும் கண்டு பரவசமுற்றனர்.

அவர்கள் வேண்டுதல் பலித்தது. ஓங்கி உலகளந்த உத்தமன் சண்பகாரண்யத்தில் ராஜகோபாலனாய் கோயில் கொண்டான் என்பது தலச்சிறப்பாகும்.

பசுமாடு, கன்றுகளுடன் மேய்க்கும் திருக்கோலமாய் பசுவிடம் சிறிது சாய்ந்து கொண்டு ஒற்றை ஆடையுடன் ஒரு காதில் ஓலையும், ஒரு காதில் குண்டலமும் விளங்க ஒரு கையின் நுனியில் மும்மடிப்புள்ள சாட்டையுடன் கூடிய தங்கக் கோலை ஏந்தியும், இடது திருக்கரத்தைச் சத்தியபாமாவின் திருத்தோளிலே பதியச்செய்தும் உள்ளம்கவர் பேரழகனாய் அருள்மிகு ஸ்ரீவித்யா ராஜகோபாலன் காட்சியளிக்கின்றார்.

உற்சவர் ஸ்ரீ செங்கமலத்தாயார் படிதாண்டாப்பத்தினியாக செங்கமலத்திலேயே வீற்றிருக்கின்றாள்.

ஐஸ்வர்யம், வீரியம், புகழ், ஞானம், வைராக்கியம் ஆகிய ஐந்து கல்யாண குணங்களையும் உடைய இராஜமன்னார்குடி இராஜகோபாலன் செங்கமலத் தாயார் தரிசனம் சகல பிரார்த்தனைகளையும் நிறைவேற்றும் சிறப்புடையதாகும்.


திருக்கோயில்

திங்கள் இதழ்




சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| தனி இதழின் விலை | - ரூ | 10/- |
| ஓராண்டுச் சந்தா | - ரூ | 120/- |
| பத்து ஆண்டுச் சந்தா | - ரூ | 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | - ரூ | 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

விளம்பரக் கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பின் பக்க அட்டை வெளிபுறம் (வண்ணத்தில்) | ரூ. 25,000/- |
| 1. | முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ. 12,000/- |
| 2. | பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3. | உள்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 4. | உள்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பண விடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை சென்னை-34 என்ற பதவிப் பெயரில் அனுப்பவும்.

# தூப்புல் ஸ்ரீ வேதாந்த தேசிகர்

**(கி.பி.1268 - 1369)**


ஆசார்ய சிரேஷ்டரான ஸ்ரீ வேதாந்த தேசிகர் சுமார் 700 வருடங்களுக்கு முன் காஞ்சிபுரத்துக்கு அருகில் உள்ள தூப்புல் (பரிசுத்தமான விசுவாமித்ரம் எனப்படும் தர்ப்பைப்புல் வளர்ந்த காடு) என்கிற திவ்யதேசத்தில் 'அநந்த சூரி, தோதாரம்பா' தம்பதியினருக்கு விபவ வருடம் புரட்டாசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் திருப்பதி ஸ்ரீநிவாஸன் கோயில் மணியின் அம்சமாகப் பிறந்தார். இயற்பெயர் வேங்கடநாதன். இவர் சிறுவயதிலேயே இவருடைய தாய்மாமன் அப்புள்ளார் மூலம் கல்வி கற்றுத் தேர்ச்சி பெற்றார். அவர் மூலம் கருட மந்திரத்தைக் கற்று திருவஹீந்திரபுரம் சென்று அங்கு கருட நதியில் நீராடி கருட மந்திரத்தை ஜெபித்து தவம் செய்தார். கருடபகவான் இவருக்கு காட்சியளித்து ஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்து அந்தப்பெருமாளின் அருளைப் பெற உத்தரவிட்டார். இவரும் அவ்வாறே செய்ததன் மூலம் பல கிரந்தங்களையும், உரைநடைகளையும், நாடகங்களையும் இயற்றினார். தனக்கு அருள்வழங்கிய கருடனைப்பற்றி கருட பஞ்சாசத், ஹயக்ரீவரைப் பற்றி ஹயக்ரீவ ஸ்தோத்திரம் முதலியவைகளை எழுதியுள்ளார்.


ஒரு சமயம் தன்னை நாடி வந்த ஏழை பிரம்மச்சாரியின் திருமணத்திற்கு உதவி செய்ய எண்ணி காஞ்சிபுரம் பெருந்தேவித் தாயார் சந்நிதிக்கு அழைத்து சென்று "ஸ்ரீஸ்துதி" பாடினார். பெருந்தேவித்தாயாரும் உள்ளம் உகந்து வானத்தில் இருந்து பொற்காசுகளை மழையாகப் பொழிந்தார்.

அச்செல்வம் அனைத்தையும் அளித்து பிரம்மசாரியின் திருமணத்தை நடத்திய விந்தையை நிகழ்த்தினார்.

ஸ்ரீரங்கத்தில் இதர சமயத்தை சேர்ந்தவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களை வாதம் செய்ய அழைத்த பொழுது அங்கு உள்ளவர்கள் காஞ்சியில் இருந்து இவரை வரவழைத்தபின் அவர்களுடன் வாதம் செய்து வென்றதால் இவருக்கு **(வேதாந்தாச்சாரியார்) வேதாந்த தேசிகர்** என்ற பெயர் ஏற்பட்டது.

மாலிக்காபூர் என்ற முஸ்லிம் தலைவன் படைகளோடு ஸ்ரீரங்கத்தைத் தாக்க நினைத்துப் போர் தொடுத்த பொழுது ஸ்ரீரங்கம்





கச்சிவரதரை, வேதாந்த தேசிகர், விளக்கொளிப் பெருமாள் திருக்கோயிலுக்கு (தூப்புல்) எழுந்தருளுகையில் கைகூப்பி வணங்கும் திருக்கோலம்

மூலஸ்தானத்திற்கு கல் திரை (கல் சுவர்) எழுப்பி உற்சவரை ரகசியமாக வெளியில் எடுத்துச் சென்று, ஊர் ஊராகச் சுற்றி கடைசியாக திருப்பதியில், தற்பொழுது உள்ள உற்சவரை வைத்துக் காப்பாற்றி, பின்னர் பலகாலம் கழித்து பொப்பண்ணா என்பவர் மூலம் முகம்மதியப் படைகளை ஸ்ரீரங்கத்தில் இருந்து விரட்டி, திருப்பதியில் இருந்து உற்சவரை திரும்ப ஸ்ரீரங்கத்தில் கொண்டு சேர்த்தனர். இவரது முயற்சியில்லையேல் இன்று நாம் திருவரங்கத்தானை வணங்க இயலாது.!

"ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்வியபிரபந்தங்கள், வேதாந்தங்கள் நமக்கு இரு கண்கள் போன்றன. லக்ஷ்மியும் நாராயணனும் திவ்ய தம்பதிகள், நமக்கு ஸ்வாமி சேஷி தம்பதி, இருவரும் உபாயம் - சரண்ய தம்பதி. இருவருக்கும் செய்வதே புருஷார்த்தம். அவர்களைப் போல அவனடியார்களும் நமக்கு ஸ்வாமிகள்" என்று தம்நூல்களில் தெரிவித்துள்ளார்கள்.

இவர் எழுதிய முக்கிய நூல்கள் ஹயக்ரீவஸ்தோத்ரம், தசாவதார ஸ்தோத்ரம், ரகுவீர சத்யம், ஸ்ரீஸ்துதி, பூஸ்துதி, ஸ்ரீகோதாஸ்துதி, கருட தண்டகம், கருட பஞ்சாசத், ந்யாஸ விம்சதி, ஹஸ்திகிரி, மகாத்ம்யம், ஸ்ரீஸங்கல்ப சூர்யோதயம் (நாடகம்).

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த மகானின் ஜயந்தி (பிறந்தநாள்) செப்டம்பர் மாதம் 24ந்தேதி வெள்ளிக்கிழமை அன்று மிகச் சிறப்பாக இவர் பிறந்த தூப்புல் விளக்கொளிப் பெருமாள் திருக்கோயில் மற்றும் வடகலை ஸம்ப்ராதாய திருக்கோயில்களில் நடைபெறுகிறது. கல்விக்கடவுள் ஹயக்ரீவரை நமக்கு காட்டி ஞானமும் கல்வியும் சுட்டித் தந்தவர் ஸ்ரீவேதாந்த தேசிகர். நாம் அனைவரும் இம்மகானின் படைப்புகளைப் போற்றிப் பாதுகாத்து, கற்று நற்செல்வங்களைப் பெறுவோமாக.

⌘⌘⌘


## ஆப்பம் திருடிய அழகர்



திருமாலிருஞ்சோலை உற்சவமூர்த்தியான கள்ளழகர் ஆப்பம் சுட்டு விற்றுக் கொண்டிருந்த பெண்ணிடம் ஆப்பம் வாங்கித் தின்றுவிட்டு, காசு கொடுக்காமல் திருட்டுத்தனமாக நழுவி விட்டாராம். இதனால் அந்த இடத்தில், இன்றும் கள்ளழகர் உலா வரும்போது மேளதாளச் சத்தம், ஆர்ப்பாட்டம் இல்லாமல் பல்லக்கு வேகமாய் கடந்து வந்து, சிறிது தூரத்திற்கு பின்னர்தான் பழைய ஆரவாரம் தொடரும். ஆப்பத்தை எடுத்துக்கொண்டு ஓடி மறைந்து நின்ற கோலக் கள்ளழகர் திருப்பேரை நகரில் சயனக் கோலத்தில் அப்பக்குடத்தானாக விளங்குவதைக் கண்டுபிடித்து மங்களாசாசனம் செய்தார் நம்மாழ்வார்.


சிறப்பாசிரியர் மற்றும் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆணையர்,
வெளியிடுவோர் : தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையஆட்சித்துறை, சென்னை - 600 034.தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் அச்சு மற்றும் உபபொருள்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட். சென்னை-14. தொலைபேசி எண் : 28485670

அருள்மிகு அமிர்தபவல்லி சமேத
ஸ்ரீ யோக நரசிம்மசுவாமி அருள்பெற
பிரார்த்திக்கிறோம்



**எஸ்.பெருமாள் மற்றும் நண்பர்கள்**

பெரியமலை பிரசாதக் கடை குத்தகைதாரர்
கொண்டபாளையம், சோளிங்கர், வேலூர் மாவட்டம்

With the best compliments from :



# Heritage Property Development Company Ltd.

Corporate Office :
New No. 13 (Old No.7), Dhandapani Street, T. Nagar, Chennai - 17.
Tel : 2432 6672 / 2432 8895 / 5212 7839 / 52010204 / 52010205
E-mail : hpdc@vsnl.net   Website : www.heritageprops.com